
விலை: 30.00
பக்கங்கள் : இருபது
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

சிறப்பு சலுகை
January 31 திகதி வரை மட்டுமே
ஆரோக்கியா
பல் வைத்தியசாலையின்
விசேட கட்டண சலுகையை
பெற்றுக்கொள்ள
இன்றே விரைந்திடுங்கள்.
Petrol Shed Lane, Nelliyady.
074 070 2241, 075 975 9828
(5389)

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 17 சனிக்கிழமை (30.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 042



## வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கு இராணுவப் பயிற்சி வேண்டும்
### நீதியரசர் விக்னேஸ்வரன் வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)
வடக்கு - கிழக்கு மாணவர்கள் இராணுவப் பயிற்சி பெற வேண்டும் என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.
எனினும், பயிற்சி ஆணைகள் தமிழ் மொழியிலேயே இருக்க வேண்டும் என வும் அவர் வலியுறுத்தி 19

விலங்கு வேட்டைக்கு அமைத்த
## மின்சாரத்தில் சிக்கி இரு குடும்பஸ்தர்கள் பலி
### மன்னாரில் சம்பவம்

(மன்னார்)
மன்னார் - யாழ்ப்பாணம் பிரதான வீதி, திருக்கேதீஸ வரம் மாளிகைத்திடல் 19

கிளிநொச்சியில்
## உ/த மாணவன் சடலமாக மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி பிரமந்தனாறு பாடசாலை மாணவன் ஒருவன் நேற்று வீட்டிலிருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
நேற்றைய தினம் மாணவன் 19

இலங்கை தொடர்பில் புதிய தீர்மானத்தை
# ஐ.நா உறுப்பு நாடுகள் நிறைவேற்ற வேண்டும்
## மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்து

(கொழும்பு)
**இலங்கையில் தற்போது மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் ஏற்றவகையிலான புதியதொரு தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள் ஒன்றிணைந்து நிறைவேற்ற வேண்டும் என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.**

இலங்கை தொடர்பான ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டின் அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டதை அடுத்து மனித உரிமைகள் பேரவையினால் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
அதில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது. 19

தீக்காயத்துக்குள்ளான
## குடும்பப் பெண் உயிரிழப்பு
### நாவற்குழியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)
தீக்காயத்துக்குள்ளான குடும்பப் பெண் ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.
இதில் நாவற் 19

வவுனியாவில் பணிபுரியும்
## பயங்கரவாத தடுப்புப் பிரிவு உத்தியோகத்தர்கள்
### 17 பேருக்கு கொரோனா

(வவுனியா)
வவுனியாவில் பணிபுரியும் பயங்கரவாத தடுப்புப் பிரிவு மற்றும் ஏனைய 19

## வடக்கின் 5 மாவட்டங்களுக்கும் கொரோனா தடுப்பூசி வழங்கும் பணிகள்
### இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)
வட மாகாணத்தின் 5 மாவட்டங்களிலும் கோவிட் - 19 தடுப்பூசி வழங்கும் பணிகள் இன்று ஆரம்பிக்கப்படவுள்ளதாக மாகாண சுகாதார பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.
5 மாவட்டங்களிலும் மருத்துவர்கள், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள், பொதுச் சுகாதாரப் பரி 19

உரும்பிராயில் விபத்து
## விளையாட்டு பயிற்றுவிப்பாளர் பலி


19

இலங்கை தொடர்பான
## ஐ.நாவின் அறிக்கையை கவனமாக ஆராய்கின்றோம்
### அமெரிக்கா தெரிவிப்பு

(கொழும்பு)
இலங்கையின் எதிர்காலம் உரிமைகளை மதித்து, கடந்த காலத்தை சமா 19



தடுப்பூசி ஏற்றும் பணி
## இராணுவத்திலிருந்து நேற்று ஆரம்பம்

(கொழும்பு)
இலங்கையில் முதன்முறையாக இராணுவ உத்தியோகத்தர்களுக்கு கோவிட் - 19 தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது.
ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா 19

## கோவிட் 19 தொற்றால் மேலும் 8 பேர் மரணம்
### உயிரிழப்பு 305 ஆக உயர்வு
### நேற்றும் +859 பேருக்கு தொற்று

(யாழ்ப்பாணம்)
நாட்டில் கோவிட் - 19 தொற்றால் மேலும் 8 பேர் உயிரிழந்துள்ளனர் 19

வடக்கில் நேற்றும்
## 7 பேருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத்தில் 19

கிளிநொச்சி விவேகானந்தா நகரில்
## வீட்டுக் கூரையிலிருந்து 25 கிலோ கஞ்சா மீட்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி விவேகானந்தா நகர் பகுதியில் வீட்டுக் கூரையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 25 கிலோ கஞ்சா வினை கிளி 19

## ஆட்டோக்கள் விற்பனைக்கு

201- /206- / HX
இலக்கங்களை உடைய
ஆட்டோக்கள் விற்பனைக்கு.

077 898 9691
யாழ்ப்பாணம்

(5455)

## மணமகன் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1976 ஆம் ஆண்டு பிறந்த குடும்பப்பாங்கான ஆசிரியையாக கடமை புரியும் மணமகளிற்கு தகுந்த வரனை பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்பு
070 640 5951
e-mail : engchelvam@gmail.com

(5453)

## குருந்தூர் மலைக்குச் செல்ல
# ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு

முல்லைத்தீவு - தண்ணிமுறிப்பு, குருந்தூர் மலையிலிருந்த தமிழர்களின் வழிபாட்டு அடையாளங்கள் காணாமல் ஆக்கப்பட்டமை தொடர்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன், அண் மையில் முல்லை த்தீவு பொலிஸ் நிலையத்தில் செய் யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய அவ்வாறு முறைப்பாட்டில் குறிப்பிட்டதைப் போன்று வழிபாட்டு அடையாளங்கள் காண்மால் ஆக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் பார்வையிடுவதற்கு, முல்லைத்தீவு பொலிஸார் முறைப்பாட்டாளர் ரவிகரனை நேற்று குருந்தூர் மலைக்கு அழைத்துச் சென்றனர்.

இது தொடர்பில் செய்திசேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களை மலைப் பகுதிக்குள் செல்வதற்கு பொலிஸார் அனுமதி மறுத்ததுடன், அங்கு சென்ற ஊடகவியலாளர்களின் விபரங்களைச் சேகரித்து அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.(ம-3,281)

## 56ஆவது பிறந்த நாள் நினைவலைகள்



தாயின் மடியில்
30.01.1965

நோயின் பிடியில்
16.08.2020

அமரர்
### திருமதி அருட்பராசக்தி கஜேந்திரன்

( பல் சிகிச்சைப் பிரிவு, யாழ். பரியோவான் கல்லூரி வைத்திய உதவியாளர்,
பல் சிகிச்சைப் பிரிவு, ஆதார வைத்தியசாலை, பருத்தித்துறை - பரிசாரகர்,
மேல்தர பரிசாரகர் தரம் - I பிரதேச வைத்தியசாலை, அச்சுவேலி )

இன்று மண்ணில் மலர்ந்த நன்நாள் அல்லவா!
ஐம்பத்தாறு வயதினில் நீயும் குதூகலிக்க
இறைவன் உம்மை விடவில்லை - செல்லமே!
எம்முடன் அகமகிழ்ந்த அந்நாளில்
இன்று இருள் சூழ்ந்து விட்டதம்மா
பிறந்த தின வாழ்த்துக்கூற தேடுகின்றோம் உமை எங்கும்
பாதி வழியில் உனது உயிரை பறிக்க வந்ததுவோ - இந்தக் கொடிய நோய்
பார்த்திருக்க மூன்று வருடங்களில் உனை பறித்தான் இயமன் ஏனோ?

கண்ணீரில் நனைந்த
பிறந்தநாள் வாழ்த்துக்கள்
பிரிவால் துயருறும்
பொன். கஜேந்திரன் (கணவர்)
தனுவந்தி (மகள்)
கஜானன் (மகன்)

"காந்திமனை", இந்துமன்ற வீதி,
ஆவரங்கால் மேற்கு.

(C-1302)

## பதவி வெற்றிடங்கள்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் எம்மால் புதிதாக யாழ்நகரில் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ள வைத்திய சேவை நிலையத்தில் சேவையாற்ற கோரப்படுகின்றது.

1. வரவேற்பாளர் / காசாளர்
2. மருந்தாளர்
3. தாதிய உத்தியோகத்தர்
4. தாதிய உதவியாளர்கள்
5. ஆய்வுகூட தொழில்நுட்பவியளார்
6. ஆய்வுகூட தொழில்நுட்ப உதவியாளர்
7. தரவு உள்ளீட்டாளர்
8. பயிற்சியாளர்

**குறித்த பதவிகளுக்கு தகுதியுடையவர்கள் தங்கள் விண்ணப்பங்களை உடனடியாக தலைவர், கூட்டுறவு வைத்தியசாலை சங்கம், மூளாய், சுழிபுரம்** எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தலைவர்

(C-1299)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி நிலையத்தில் பணிபுரியும்
யூட் ஜெயகாந்தன் அவர்களின் அன்புத் தந்தை

அமரர்
## டேவிட் சூசைநாதர்



மண்ணில்
06.05.1929

விண்ணில்
29.01.2021

பாசத்தின் உறைவிடமே
பண்பின் ஒளிவிளக்கே
உற்றவர் சுற்றமும்
கூடிக்கழித்த உறவுகளை
கைவிட்டுச் சென்றதேனோ?
பிரிவால் வாடி நிற்கின்ற உள்ளங்கள்
தேற்ற மொழியின்றி
தவிக்கின்றதே - நின் உறவின்
அடி தேடித் துடிக்கின்றதே....

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எங்கள் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**NEW SCIENCE WORLD**
சமூகம்

(C 1303)

# மாகாணப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக செல்ல எத்தனிப்பது வருத்தமளிக்கிறது

## வடக்கு மாகாண ஆளுநர் கவலை

(சாவகச்சேரி)

**மாகாணப் பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக செல்ல எத்தனிப்பது வருத்தமளிக்கின்றது என வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ் தெரிவித்துள்ளார்.**

அண்மையில் தென்மராட்சி கல்வி வலய பாடசாலை ஒன்றில் இடம்பெற்ற கட்டடத் திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,


வடமாகாணத்தில் உள்ள பாடசாலைகளின் உட்கட்டமைப்பு வசதிகள் ஏனைய மாகாணப் பாடசாலைகளோடு ஒப்பிடுகையில் ஓரளவிற்கு அதிகமாகவே காணப்படுகிறது.

அதிலும் எமது மாகாண சபை இந்த விடயத்தில் கவனமாக இருந்து வசதிகளை வழங்கி வருகிறது. இவ்வாறு வசதிகளை வழாங்கி வருகின்ற போதிலும் அண்மைக்காலமாக எம்மிடம் விடுக்கும் கோரிக்கைகள் எம்மை தேசிய பாடசாலைகளாக செல்ல அனுமதியுங்கள் என்பதுதான்.




இது தற்போது ஒருவிதமான செயற்பாடாக அதிபர்கள் மற்றும் பாடசாலை சமூகங்களிடம் காணப்படுகிறது. மாகாணசபை இவ்வாறு தேவைக்கு அதிகமாக வசதிகளை வழாங்கி உங்களோடு மிக நெருக்கமாக செயற்பட்டுக்கொண்டிருக்கும் போது நாங்கள் உங்களை விட்டு தேசிய பாடசாலைகளாக செல்லப் போகிறோம் என பல விதமான அழுத்தங்களைப் பிரயோகிக்கின்றனர். இது வேதனை அளிக்கும் விடயமாக உள்ளது.எங்களோடு இருப்பதற்கு விருப்பமில்லை என்ற விடயத்தை தொடர்ந்து சொல்லிக்கொண்டு இருக்கிறீர்கள். தேசிய பாடசாலையாக இருப்பது பெருமை என்றால் மாகாணத்தோடு இருப்பது அவமானம் என்று கருதுவதாகவே எமக்கு தென்படுகிறது. படிக்கும் இடம் எமக்கு பெருமை தேடித் தருவதாக இருக்கக்கூடாது. நாங்கள் படிக்கும் இடத்திற்கு பெருமை தேடிக் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என மேலும் அவர் தெரிவித்தார். (நி-30)

## உயர்குருதி அமுக்க சிகிச்சை நிலையம் யாழ்.போதனாவில் திறந்து வைப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் உயர் குருதி அமுக்க சிகிச்சை நிலையம் **(Jaffna Heyper tension Centre)** யாழ் போதனா வைத்திய சாலையில் திறந்து வைக்கப் பட்டது. யாழ்ப்பாணம்போதனா மருத்துவமனையின் விக்டோரியா வீதியில் உள்ள புதிய கிளினிக் கட்டடத் தொகுதியில் அமைந்துள்ள இந்த சிகிச்சை நிலையத்தை இருதய சிகிச்சை வல்லுநர் பூ.லக்ஸ்மன் நேற்று சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.


யாழ்.போதனா மருத்துவமனை பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி, சிகிச்சை நிலையத்தின் முதல் பணிப்பாளர், பொது மருத்துவ வல்லுநர், பேராசிரியர் தி.குமணன் மற்றும் துறைசார் மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர்கள் இவ் ஆரம்ப நிகழ்வில் பங்கேற்றனர்.(நி-4-33)

## யாழ்.போதனாவில் இன்று தடுப்பூசி ஏற்றும் பணி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போதனா வைத்தியசாலை உள்ளிட்ட சுகாதாரத் துறையினருக்கு கொவிட்-19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி இன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக யாழ். போதனா மருத்துவமனைப் பணிப்பாளர், மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், யாழ். போதனா மருத்துவமனை மருத்துவ வல்லுநர்கள், மருத்துவர், தாதியர்கள், மருத்துவ சேவையாளர்கள் மற்றும் ஊழியர் களுக்கு தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார்.



மேலும், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு இரண்டாயிரத்து 300 கொவிட்-19 தடுப்பூசி மருந்துகள் கோரப்பட்டுள்ளதாகவும் யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தின் ஊடாக அதனை நேற்று பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டார்.

இங்கிலாந்தின் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தால் உருவாக்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கொவிஷீல்ட் **(AstraZeneca/ COVISHELD)** தடுப்பூசியின் 5 இலட்சம் டோஸ்கள் இந்தியாவினால் இலங்கைக்கு நன்கொடையாக வழங்கப்பட்டன.

இந்நிலையில், குறித்த தடுப்பூசி முதற்கட்டமாக சுகாதாரத் துறையினர், பொலிஸார் மற்றும் முப்படையினருக்கு ஏற்றும் பணி நேற்று மேல் மாகாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-5-33)

# காணி விடுவிப்பு தொடர்பான தீர்மானங்கள் ஒருங்கிணைப்புக் கூட்டத்தில் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச மக்களின் மீள்குடியேற்றம் தொடர்பாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் எடுக்கப்பட தீர்மானத்தை ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவர் அங்கஜன் இராமநாதன் தலைமையில் இடம்பெற்ற தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

தெல்லிப்பழை பிரதேசத்தில் 2300 குடும்பங்களின் 3328.1 ஏக்கர் நிலப்பரப்பு விடுவிக்கப்பட்டு மீள் குடியேற்றம் செய்யப்பட வேண்டிய தேவைப்பாடு நிலவுவதாக பிரதேச செயலகத்தினரால் சுட்டிக்காட்டப்பட்ட போதே குறித்த விடயம் கூட்டத்தில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இத்தீர்மானப் பிரதிகளை ஜனாதிபதி, பாதுகாப்பு செயலாளர் மற்றும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

தீர்மானம் அனுப்பி வைக்கப்படும் போது ஏற்கனவே விடுவிக்கப்படுவதாக தீர்மானம் எடுக்கப்பட்டு இன்னமும் விடுவிக்கப்படாத பிரதேசங்கள் மற்றும் விடுவிக்கப்பட்டும் மக்களிடம் கையளிக்கப்படாத தையிட்டி வடக்கு பிரதேசம் ஆகியனவும் கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என கூட்டத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் வலியுறுத்தியிருந்தார்.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 3 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் முழுமையாகவும்,18 கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் பகுதியளவிலும் விடுவிக்கப்படவில்லை எனப் பிரதேச செயலகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர். (5-4-30)

# பாகிஸ்தான் அசத்தல் வெற்றி: தென்னாபிரிக்கா ஏமாற்றம்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான முதல் டெஸ்டில் அசத்திய பாகிஸ்தான் 7 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

பாகிஸ்தான் சென்றுள்ள தென் ஆப்ரிக்க அணி, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் பங்கேற்கிறது.

முதல் டெஸ்ட் கராச்சியில் நடந்தது. முதல் இன்னிங்சில் தென் ஆப்ரிக்கா 220, பாகிஸ்தான் 378 ஓட்டங்கள் எடுத்தன. மூன்றாம் நாள் முடிவில் 2வது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 4 விக்கெட்டுக்கு 187 ஓட்டங்களை எடுத்திருந்தது. மஹாராஜ் (2), குயின்டன் டி கொக் (0) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

**நவுமன் அசத்தல்**

நேற்றைய நான்காம் நாள் ஆட்டத்தில் இரண்டாவது இன்னிங்சை தொடர்ந்த தென்னாபிரிக்க அணிக்கு கேஷவ் மஹாராஜ் (2), அணித் தலைவர் குயின்டன் டி கொக் (2) ஏமாற்றினர்.

பின் களமிறங்கிய தென்னாபிரிக்க துடுப்பாட்ட வீரர்களுக்கு நவுமன்' அலி தொல்லை கொடுத்தார். இவரது 'சுழலில்' ஜார்ஜ் லிண்டே (11), ரபாடா (1), நோர்ட்ஜே (0) சிக்கினர். சிறிது நேரம் தாக்குப்பிடித்த டெம்பா பாவுமா (40) ஆறுதல் தந்தார். இரண்டாவது இன்னிங்சில் தென்னாபிரிக்க அணி 245 ஓட்டங்களுக்கு சகலவிக்கெட்டுக்களையும் இழந்தது. லுங்கிடி (3) ஆட்டமிழக்காமல் இருந்தார்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் சார்பில் நவுமன் அலி 5, யாசிர் ஷா 4 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

**சுலப இலக்கு:**

88 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிய இலக்குடன் 2வது இன்னிங்ஸை ஆரம்பித்த பாகிஸ்தான் அணிக்கு இம்ரான் பட் (12), அபித் அலி (10) ஏமாற்றினர்.

பின் இணைந்த அசார் அலி, பாபர் ஆசம் ஜோடி நம்பிக்கை அளித்தது. மூன்றாவது விக்கெட்டுக்கு 63 ஓட்டங்கள் சேர்த்த போது கேஷவ் மஹாராஜ் 'சுழலில்' பாபர் ஆசம் (30) சிக்கினார். அடுத்து வந்த பவாத் ஆலம், மஹராஜ் பந்தை பவுண்டரிக்கு அனுப்பி வெற்றியை உறுதி செய்தார்.


இரண்டாவது இன்னிங்ஸில் பாகிஸ்தான் அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 90 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. அசார் அலி (31), பவாத் ஆலம் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். தென்னாபிரிக்கா சார்பில் நோர்ட்ஜே 2 விக்கெட் வீழ்த்தினார்.

ஆட்டநாயகன் விருதை பாகிஸ்தானின் பவாத் ஆலம் வென்றார். பாகிஸ்தான் அணி 1-0 என, முன்னிலை பெற்றது. இரண்டாவது டெஸ்ட் வரும் பெப் 4ஆம் திகதி ராவல்பிண்டியில் ஆரம்பமாகிறது.



39 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றி தென்னாபிரிக்காவின் ஓட்ட குவிப்பை மட்டுப்படுத்திய அறிமுக நவ்மன் அலி விக்கெட் ஒன்றை கொய்த மகிழ்ச்சியில்...

# விஜய் சங்கருக்கு திருமணம்



இந்திய அணி வீரர் விஜய் சங்கர் வைஷாலி ஜோடிக்கு திருமணம் நடந்தது.

இந்திய அணியின் சகலதுறை வீரர் விஜய் சங்கர் வயது-30). தமிழகத்தை சேர்ந்தவர். 2018ல் இலங்கைக்கு எதிரான 'ரி20' (கொழும்பு) போட்டியில் அறிமுகம் ஆனார்.

கடந்த 2019 உலக கிண்ணத் தொடரில் களமிறங்கிய முதல் போட்டியில் (பாகிஸ்தான்) முதல் பந்தில் விக்கெட் வீழ்த்தினார் அசத்தினார். இதுவரை 12 ஒருநாள், 9 'ரி20' போட்டிகளில் பங்கேற்றுள்ளார்.

ஐ.பி.எல்., தொடரில் ஹைதராபாத் அணிக்காக விளையாடுகிறார். இவருக்கும், வைஷாலிக்கும் கடந்த ஒகஸ்ட் மாதம் நிச்சயதார்த்தம் நடந்தது. இந்த ஜோடிக்கு திருமணம் நடந்தது. இதை ஹைதராபாத் அணி நிர்வாகம் தனது 'டுவிட்டர்' சமூக வலைதளத்தில் வெளியிட்டது.

அதில், 'உங்களது திருமண வாழ்க்கை இனிமையாக அமையட்டும். இந்த இனிமையான நாளில் எங்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்,' என தெரிவித்துள்ளது.

# தேறுகிறார் தாதா



'ஆன்ஜியோபிளாஸ்டி' சிகிச்சை செய்யப்பட்ட கங்குலி, தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து தனி அறைக்கு மாற்றப்பட்டார். இந்திய அணி முன்னாள் தலைவர் கங்குலி (வயது-48).

கடந்த 2019 முதல்இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) தலைவராக உள்ளார். கடந்த ஜன. 2இல் நெஞ்சு வலி ஏற்பட, இரு தயத்துக்கு செல்லும் ரத்தக்குழாய்களில் மூன்று இடங்களில் அடைப்பு இருந்தது தெரிந்தது. 90 சதவீதம் பாதிப்பு இருந்த ஒரு அடைப்பு மட்டும் உடனடியாக 'ஆன்ஜியோபிளாஸ்டி' சிகிச்சையில் சரிசெய்யப்பட்டது.

இதனிடையே கங்குலிக்கு மீண்டும் லேசான நெஞ்சுவலி ஏற்பட, கொல்கத்தாவில் தனியார் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இங்கு, கங்குலிக்கு மீண்டும் 'ஆன்ஜியோபிளாஸ்டி' சிகிச்சை செய்யப்பட்டது.

மீதமிருந்த இரு அடைப்புகளை சரிசெய்ய கூடுதலாக இரு 'ஸ்டென்ட்' பொருத்தப்பட்டன. தற்போது கங்குலி தேறி வருகிறார்.

இதுகுறித்து மருத்துவமனை நிர்வாகம் வெளியிட்ட அறிக்கையில்,'டர்க்டர்கள் அஷ்வின் மேத்தா, அப்தான் கான் என இருவரும் கங்குலியை சோதித்தினர். தற்போது அவர் நலமாக உள்ளார். தீவிர சிகிச்சை பிரிவில் இருந்து கங்குலி, தனி அறைக்கு மாற்றப்பட்டார்,' என தெரிவித்துள்ளது.

# சிக்கலில் ரொனால்டோ



ரொனால்டோ கொரோனா விதிகளை மீறியது குறித்து இத்தாலி பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

போர்த்துக்கல் கால்பந்து அணியின் தலைவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. இத்தாலியின் யுவண்டஸ் கழக அணிக்காக விளையாடுகிறார். தற்போது 'சீரி ஏ' தொடரில் பங்கேற்க டுரின் சென்றுள்ளார்.

இவரது தோழி ஜார்ஜினா ரோட்ரிக்ஸ். இவரது 27 வது பிறந்த நாளை கொண்டாடும் வகையில் இருவரும் இணைந்து இத்தாலியில் உள்ள பனிமலைப் பகுதிக்கு சென்றுள்ளனர். இங்கு இருவரும் வாகனத்தில் சென்றனர்.

இதுகுறித்து சமீபத்தில் ரோட்ரிக்ஸ் வெளியிட்ட போட்டோ, வீடியோ சர்ச்சை கிளப்பியுள்ளது. ஏனெனில் கொரோனா காரணமாக இத்தாலியில் சுற்றுலா இடங்களுக்கு செல்ல தடை விதிக் கப்பட்டுள்ளது.

ஆனால் ரொனால்டோ இரு நாட்கள் பயணமாக சென்று வந்துள் ளார்.

தற்போது இது குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர். இதில்ரொனால்டோ தவறு செய்தது நிரூபிக்கப்படும் பட்சத்தில், அபராதம் விதிக்கப்படும் எனத் தெரிகிறது.

# கவனமாக விளையாடுங்கள் நட்டு

## இர்பான் பதான் அட்வைஸ்




"இந்திய அணிக்காக நடராஜன் இன்னும் 5 முதல் 7 ஆண்டுகள் வரை விளையாட வேண்டும்," என இர்பான் பதான் தெரிவித்தார்.

இந்திய அணி ஒவ்வொரு முறை ஆஸ்திரேலிய தொடருக்கு செல்லும் போதும் புதிய வேகப்பந்து வீச்சாளர் உருவெடுத்து அணியின் வெற்றிக்கு கைகொடுக்கிறார். 2003-04 தொடரில் இந்திய அணியின் வெற்றிகரமான பந்துவீச்சாளராக இர்பான் பதான் வந்தார். 2016 தொடரில் பும்ரா உருவெடுத்தார். அந்த வழியில் 2020-21 தொடரில் தமிழகத்தின் 'யார்க்கர்' நடராஜன் வந்துள்ளார்.

வருண் சக்ரவர்த்திக்கு மாற்றாக வந்த இவர், ஒரே தொடரில் மூன்று வித கிரிக்கெட்டிலும் அறிமுகம் ஆன முதல் இந்திய வீரர் என்ற பெருமை பெற்றார்.

இதுகுறித்து முன்னாள் சகலதுறை வீரர் இர்பான் பதான் கூறியது,

நடராஜன் போட்டிகளில் தொடர்ந்து பிரகாசிக்க, இன்னும் தீவிர பயிற்சிகளில் ஈடுபட வேண்டும். வேகம் மற்றும் வீசும் முறையில் சற்று கவனம் செலுத்த வேண்டும். இந்திய அணிக்காக தொடர்ந்து ஐந்து முதல் ஏழு ஆண்டுகள் வரை விளையாட வேண்டும் என்பது தான் நடராஜனின் முதல் லட்சிய மாக இருக்க வேண்டும். இதற்காக 'பிட்னஸ்' விடயத்தில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். இவரை சிறந்த வீரராக மாற்ற அணி நிர்வாகமும் இணைந்து செயல்படும் என நம்புகிறேன். இவ்வாறு அவர் கூறினார்.

# தடுப்பூசி என்பது சுகாதார விதிமுறைகளில் இருந்து மீள்வதற்கான அனுமதிப் பத்திரம் அல்ல

## அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை தொடர்ந்து கடைப்பிடியுங்கள்

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

**தடுப்பூசியை ஏற்றிக்கொள்வதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்குமே தவிர நோய் முழுமையாக குணமடையாது. தடுப்பூசி மூலமான நன்மை 80 வீதம் மாத்திரமே என்பதால் ஆரம்பத்திலிருந்து பின்பற்றிய அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை மீறி செயற்பட முடியாது என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அலுத்கே தெரிவித்தார்.**

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

தற்போது உலகளாவிய ரீதியில் கொவிட் தடுப்பூசிக்கான கேள்வி அதிகரித்துள்ளது.

எனவே இலவசமாக கிடைக்கும் தடுப்பூசிகளுக்கு மேலதிகமாக நாட்டு மக்களுக்கு வழங்குவதற்கான தடுப்பூசிகளைக் கொள்வனவு செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதற்கான நடவடிக்கைகள் இப்போதிலிருந்தே ஆரம்பிக்கப்பட வேண்டும்.

அவ்வாறில்லையெனில் அடுத்த தொகை தடுப்பூசிகளை பெறுவதற்கு ஓரிரு மாதங்கள் காலதாமதமாகுமாயின் அது பிரயோசனமற்றது.

அத்தோடு அவ்வாறு கொள்வனவு செய்யும் தடுப்பூசிகளும் நம்பிக்கைக்குரியதாகவும் பாதுகாப்பானதாகவும் இருக்க வேண்டும்.

சுகாதாரத்துறையினருக்கு அஸ்ட்ராஜெனிகா ஊசிகளை வழங்கிவிட்டு நாட்டு மக்களுக்கு ஏற்றுக்கொள்ளப்படாத தடுப்பூசியை வழங்க முடியாது.

சுகாதார மேம்பாட்டு பணியகத்தினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் அடிப்படையில் நூற்றுக்கு 8 சதவீதமானோர் மாத்திரமே தடுப்பூசிகளை ஏற்கப்போவதில்லை என்று தீர்மானித்துள்ளதாகவும் ஏனைய 92 சதவீதமானோர் தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதில் ஆர்வமாகவுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

54 சதவீதமானோர் கட்டாயமாக தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாட்டிலும் 30 வீதமானோர் இரு நிலைப்பாடுகளில் உள்ளதாகவும் தெரிய வந்துள்ளது.

சுகாதாரத்துறை மற்றும் பாதுகாப்புத்துறை என அனைவருக்கும் தடுப்பூசி வழங்கப்பட்டாலும் நூற்றுக்கு நூறு வீதம் பாதுகாப்பாக இருக்கின்றோம் என்று யாரும் கருத முடியாது.

தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்பதற்காக அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளிலிருந்து விலக முடியாது என்பதை உலக சுகாதார ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது.

எனவே தடுப்பூசி ஏற்றுவதற்கு முன்னர் பேணிய அடிப்படை சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளை பின்பற்ற வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

தடுப்பூசி வழங்குதல் என்பது சுகாதார பாதுகாப்பு விதிமுறைகளிலிருந்து மீள்வதற்கான அனுமதிப்பத்திரமல்ல.

தடுப்பூசி ஏற்றிக் கொண்ட பின்னரும் தொற்றுக்கு உள்ளாகக் கூடிய வாய்ப்பு 20 சதவீதம் காணப்படுகிறது.

காரணம் தடுப்பு மருந்தின் மூலம் 80 வீத நன்மையையே பெற்றுக் கொள்ள முடியும். தடுப்பூசியை ஏற்றிக் கொள்வதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்குமே தவிர நோய் இல்லாமல் போகாது எனவும் தெரிவித்தார். (நி-4)

# 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர். திருமதி. இராசலெட்சுமி தவராசா



திதி: துதியை 30.01.2021

மலர்வு 24 . 04 . 1946

உதிர்வு 22 . 01 . 2019

நீங்கள் எம்மை விட்டுப் பிரிந்து
ஈராண்டுகள் ஓடி மறைந்தாலும்
உங்கள் இனிய பேச்சும்
எமை மகிழ்விக்கும் புன்னகையும்
நம்பிக்கை தரும் வார்த்தைகளும்
எங்கள் மனதை விட்டு
மறையவில்லை அம்மா!
உங்கள் உடல் எம்மை
விட்டுப் பிரிந்தாலும்
உங்கள் உயிர்
எம்மில் வாழ்வதை எம் உள்ளம்
அறியும் அம்மா!!
இறப்பில்லா உங்கள் உயிர்
உயிரோடு உயிராய்
உணர்வோடு உணர்வாய்
என்றுமே எம்மில்
நிலைத்திருக்கின்றது அம்மா!!!
எங்கள் உள்ளங்களில் நிலையாய்
நிலைத்து வாழ்கின்றாய் எம் அன்புத் தாயே

இல. 11, சென்.மேரிஸ் 2 ஆம்
ஒழுங்கை, கொழும்புத்துறை.

என்றும் உம் நினைகளுடன்
குடும்பத்தினர்.

(5438)

# எமது இனத்தின் அடையாளச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்-பிரதேச சபை உறுப்பினர்

(சாவகச்சேரி)

**சாவகச்சேரி பிரதேச சபை எல்லைக்குள் காணப்படுகின்ற எமது இனம் சார்ந்த சகல அடையாளச் சின்னங்களையும் பாதுகாக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என சாவகச்சேரி பிரதேசசபை உறுப்பினர் சி.கஜேன் பிரேரணை ஒன்றினைச் சமர்ப்பித்துள்ளார்.**

அண்மையில் பிரதேச சபையில் இடம்பெற்ற மாதாந்த அமர்வின் போதே அவர் குறித்த பிரேரணையை சபையில் முன்வைத்தார்.

குறித்த விடயம் பற்றி அவர் தெரிவிக்கையில்,

அரசு மேற்கொண்ட இன அழிப்பு நடவடிக்கையின் உச்சக்கட்டம் தான் முள்ளிவாய்க்கால் இனவழிப்பு.

எமது இனத்தின் அடையாளங்களையும் அது சார்ந்த வரலாறுகளையும் அழிப்பது என்பது மீண்டும் எம் இனத்தினை அழிக்க எடுக்கும் முயற்சியாகும்.

எமது இனத்தின் ஒப்பற்ற வரலாறுகளையும் நாம் சுமந்து வந்த துயரங்களையும் அவலங்களையும் அடுத்த சந்ததிக்கு கடத்தக்கூடாது என்ற ஒரே நோக்கோடு தான் இவ்வாறான அடக்குமுறைகளும் அழிப்புகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

அந்தவகையில் நாம் ஒன்றுபட்டு திட்டமிட்ட அடக்குமுறைகளுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும்.

சாவகச்சேரி பிரதேச சபையின் ஆளுகைக்கு உட்பட்ட எமது இனம் சார்ந்த அத்தனை அடையாளச் சின்னங்களையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

குறிப்பாக அல்லாரை சீலன் பூங்கா, விடத்தற்பளையில் அன்னை பூபதி நினைவுத் தூபி, மிருசுவில் மன்னன் குறிச்சியில் செல்லப்பா சுவாமிகள் சமாதி மற்றும் ஒட்டுவெளியில் காசிப்பிள்ளை சுவாமிகள் சமாதி உள்ளிட்ட வரலாற்று அடையாளச் சின்னங்கள் எமது சபை எல்லைக்குள் காணப்படுகின்றன என மேலும் அவர் தெரிவித்தார். (5-4-30)

# இடிதாங்கியும் வெளிச்சவீடும் அமைத்துத் தருமாறு கோரிக்கை

(குருநகர்)

நீண்ட காலமாக குருநகரில் இடிதாங்கியும் வெளிச்சவீடும் அவசியமானது என குருநகர் கடற்றொழில் மீனவ சங்கத்தினால் கோரிக்கை விடுக்கப்பட்டபோதிலும் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. அனர்த்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களின் போது தொழிலாளர்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

ஆகவே அவ்விடத்தில் இடிதாங்கியும் வெளிச்சவீடும் மிகவும் அவசியமானது என குருநகர் கடற்றொழில் சங்கத்தினரால் யாழ்.பிரதேச செயலகத்தில் நடைபெற்ற ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் சங்க பிரதிநிதிகளால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

யாழ்.பிரதேச செயலாளர் எஸ்.சுதர்சன் தலைமையில் கடந்த புதன்கிழமை பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் அதற்கான நடவடிக்கைகள் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு மேற்கொள்ளப்படும் என பிரதேச செயலர் தெரிவித்தார். (5-4-106)

# யாழ்.வணிகர் கழகத்திற்கு உத்தியோகபூர்வ இணையத்தளம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வணிகர் கழகத்திற்கென **jaffnachamberofcommerce.lk** எனும் பெயரில் புதிதாக இணையத்தளமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நேற்று முன்தினம் வியாழக்கிழமை யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள வணிகர் கழகப் பணிமனையில் இடம்பெற்றது.

யாழ்.குடாநாடு உள்ளிட்ட வடமாகாணத்தின் வர்த்தக, கைத்தொழில், முதலீடு, சுற்றுலாத்துறை சார்ந்த விடயங்களை உள்ளடக்கிய தகவல்கள், யாழ்.நகரத்திலுள்ள வர்த்தக நிலையங்கள் தொடர்பான தகவல்கள் என்பன புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட இணையத்தளத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.


எனவே, வடமாகாணத்திலுள்ள வர்த்தகர்கள், சுயதொழில் முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள் ஆகியோர் தமது தொழில் துறை சார்ந்த விபரங்களை யாழ்ப்பாணம் வணிகர் கழகப் பணிமனையில் நேரடியாக கையளிக்க முடியும்.

அல்லது இணையத்தள முகவரிக்கோ அனுப்பி வைக்குமாறும் வணிகர் கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (5-4-18-33)

# தமிழ் மொழியை முன்னுரிமைப்படுத்த யாழ்.மாநகர முதல்வர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நெடுந்தூர பேருந்து நிலையத்தில் உள்ள பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழி இரண்டாவது இடத்திற்கு தள்ளப்பட்டுள்ளதாக சில தினங்களாக குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.




குறித்த குற்றச்சாட்டுக்களை நிவர்த்திசெய்து தமிழ் மொழியை முன்னுரிமைப்படுத்தும் நடவடிக்கையில் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் ஈடுபட்டுள்ளார்.

நகர அபிவிருத்தி, கரையோரபாதுகாப்பு, கழிவுப்பொருள் அகற்றுகை மற்றும் சமுதாய தூய்மைப்படுத்தல் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா பணிப்பிற்கமைய, நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையில் நிர்மாணிக்கப்பட்ட யாழ்ப்பாண நெடுந்தூர பேருந்து நிலையம் கடந்த 27 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டு, யாழ்.மாநகர சபையிடம் கையளிக்கப்பட்டது.

குறித்த பேருந்து நிலையம் மாநகர சபையின் ஆளுகைக்குள் வரப்பட்டதை அடுத்து முதல் வரிசையில் இவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (5-4-33)

# அறிவுத் திருக்கோவிலில் ஆளுமை திறனுக்காகப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

வாழ்க வையகம் வாழ்க வளமுடன் யாழ்ப்பாணம் மனவளக்கலை மன்ற அறக்கட்டளை யாழ்ப்பாணம் அறிவுத் திருக்கோவிலில் இன்று 30 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு புதிய பயிற்சியாளர்களுக்கான ஆளுமைத் திறனூக்கப் பயிற்சி ஆரம்பிக்கப்படவுள்ளது.

பயிற்சியினை மன்றத்தின் செயலாளரும் துணைப்பேராசிரியருமான த.நந்தகுமரன் வழங்குவார்.

எனவே புதிய பயிற்சியாளர் கள் தங்களது பதிவினை முற் கூட்டியே மேற்கொண்டு பயிற்சியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு அறிவுத்திருக் கோவிலின் 021 222 2772 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும். (5-4)



யாழ்.தமிழ் FOUNDATION மற்றும் உடுநகர் சனசமூக நிலையம் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் சனசமூக நிலைய மண்டபத்தில் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றது. இவ் இரத்ததான முகாமில் உடுப்பிட்டி, தொண்டைமானாறு, வல்வெட்டித்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த சுமார் 35 இளைஞர்கள் கலந்து கொண்டனர். (படம்:- ரவிசாந்)



தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கல்லூரி அதிபர் ம.மணிசேகரம் தலைமையில் நடைபெற்றது. (படங்கள்:- கணேலிங்கம்)

# ஐ.நா. அறிக்கை நாட்டின் சுயாதீன தன்மைக்கு பாதிப்பை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளது

## ஒருதலைப்பட்சமான அறிக்கையை ஏற்க முடியாது



(கொழும்பு)

**இல்லாத பிரச்சினைகளை இருப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் சர்வதேச அரங்கில் இலாபமடைகிறார்கள் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனிதவுரிமை பேரவையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை குறித்து வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்மேலும் குறிப்பிடுகையில்,

இலங்கை தொடர்பில் ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை ஒருதலைபட்சமானது. தமிழ் பேசும் மக்களை அர சாங்கம் புறக்கணிப்ப தாக சுட்டிக்காட்டியுள்ளதை ஏற்றுக் கொள்ள முடியாது.

தமிழ் பேசும் மக்களை அரசாங்கம் புறக்கணித்து செயற்படுவதாக குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது. 2019 ஆம் ஆண்டு ஆட்சியமைத்த அரசாங்கம் இனவாதத்தை அடிப்படையாகக் கொண்டு செயற்படவில்லை.

அனைத்து இன மக்களுக்கும் அனைத்து நிலைகளிலும் முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. கடந்த அரசாங்கம் இன நல்லிணக்கம்என்று செய்த தவறுகளை திருத்தும் போது அதனை இனப் புறக்கணிப்பு என்று கருதுவது தவறான நிலைப்பாடாகும்.

30 வருட கால சிவில் யுத்தம் முடிவடைந்த பிறகு அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்தியது.

இறுதிக்கட்ட யுத்தத்தில் மனித உரிமை மீறல்கள் இடம் பெற்றதாக குற்றஞ்சாட்டப்பட்டன. சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகளுக்கான விசாரணை நடவடிக்கைகள் அக் காலகட்டத்தில் உள்ளக பொறிமுறை ஊடாக முன்னெடுக்கப்பட்டன. 2015 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்படுத்தப்பட் டது. ஆட்சி மாற்றத்துக்கு மேற்குலக நாடுகள் பாரிய பங்களிப்பு செய்தன.

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு எதிராக 30.1 பிரேரணை கொண்டுவரப்பட்டது. இந்தப் பிரேரணையில் உள்ளடக்கப்பட்ட பல விடயங்கள் இலங்கையின் அரசி யலமைப்பிற்கும் சுயாதீனத் தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை நன்கு அறிந்தும் முன்னாள் வெளி விவகார அமைச்சர் மங்கள சமரவீர பிரேரணைக்கு இணையனுசரணை வழங்குவதாக . தனது தனிப்பட்ட விருப்பத்தை அரசாங்கத்தின் தீர்மானமாக தெரிவித்தார். இதன் தாக்கம் இன்றும் தொடர்கிறது என சரத் வீரசேகர மேலும் தெரிவித்தார். (நி-4)

## ஆதனப்பெயர் மாற்றம்

யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் - 08 உப்புக்குளம் வீதி ஆதன இல.13 என்ற வரிமதிப்பீட்டு இலக்கத்தினைக்கொண்ட ஆதனம் நாகமுத்து சின்னத்தம்பி விஸ்வநாதன் ஆறுமுகத்தின் உரிமையாளர் என ஆதனப்பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனத்தை நாகமுத்து கணபதிப்பிள்ளை பிரசித்த நொத்தாரிசு சு.செ.மகாதேவா முகதாவில் நிறைவேறிய 559 இலக்க 09.10.1950 ஆம் திகதிய அறுதி உறுதி மூலம் நாகமுத்து சின்னத்தம்பிக்கு வழங்கியுள்ளார்.

பின்னர் நாகமுத்து சின்னத்தம்பி காலஞ்சென்ற பின் அவருடைய பிள்ளைகளான சின்னத்தம்பி யோகராஜா, அலோசியஸ் விமலாதேவி மற்றும் டக்ளஸ் வசந்தமாலா ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு R.இளங்குமரன் முகதாவில் 791 இலக்க 2010.08.26 ஆம் திகதிய நன்கொடை மூலமாக நாகமுத்து சின்னத்தம்பியின் இன்னோர் மகளான கந்தசாமி லலிதாதேவிக்கு நன்கொடை உறுதி எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி சுண்டிக்குளி கோவிற்பற்று சிவியாதெரு இறை "ஆத்தியடி வளவு" நிலப்பரப்பு 09 குளி 03 ஆனால் நில அளவையாளர் எஸ்.சிவலோகநாதன் அவர்களால் 12.06.1989 திகதியிட்டு வரையப்பட்ட S.473 என்ற இலக்கம் கொண்ட நில அளவைப்படத்தின் படி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு (8) குளி (11) இதில் பிரிக்கப்பட்டதும் மேற்படி வரைபடத்தில் துண்டு 6 எனக்காட்டப்பட்டதுமான காணி இதன் விஸ்தீரணம் நிலப்பரப்பு 01 குளி 7.5 இதற்கு எல்லை.

வடக்கு:- புகையிரதத்திற்கு சொந்தமான காணி.
கிழக்கு:- மேற்குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 07.
தெற்கு:- உப்புக்குளம்.
மேற்கு:- மேற்குறித்த நில அளவைப்படத்தில் துண்டு 02 மற்றும் 05.

தற்போது கந்தசாமி லலிதாதேவி இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது கந்தசாமி லலிதாதேவி என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகர சபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**வி.மணிவண்ணன்**
**கௌரவ முதல்வர், மாநகர சபை.**

(C-1295)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

**PEARSON** INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp | IELTS

Register with us for IELTS Exam@ 29,999/=
074 188 7878-021 223 2250
infopearsonicollege@gmail.com (5417)

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffna

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,இலங்கை
## திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்

### வெளிவாரிப் பரீட்சைகள்
### வியாபார முகாமைத்துவமாணிக் கற்கைநெறி (வெளிவாரி)
### • மூன்றாம் வருட முதலாம் அரையாண்டுப் பரீட்சை - 2019

மேற்படி பரீட்சையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எதிர்வரும் மார்ச் மாதமளவில் நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இப்பரீட்சைக்கு தோற்றத் தகுதியான பரீட்சார்த்திகள் திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்திலோ அல்லது **www.codl.jfn.ac.lk** எனும் இணையத்தள முகவரியிலோ விண்ணப்பப் படிவத்தினைப் பெற்றுக்கொள்ளலாம்.

மேற்படி பரீட்சைகளுக்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்வதற்கான இறுதித் திகதி 12.02.2021 (வெள்ளிக்கிழமை) ஆகும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களினை திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையத்தில் அலுவலக நேரத்தில் (காலை 08.30 மணி தொடக்கம் மாலை 04.15 மணி வரை) சமர்ப்பிக்கலாம். அல்லது பதிவுத் தபால் மூலம் அனுப்ப விரும்புவோர் கீழ்த் தரப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கலாம்.

**பிரதிப் பதிவாளர்,**
**திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி**

மேலதிக விபரங்களைப் பெறவிரும்புவோர் 021-222-3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளலாம்.

(C-1296) **பதிவாளர்.**

# இளைஞர் கழக சம்மேளனத்தினால் புதிய தலைவர் தெரிவு

(நெளுக்குளம்)
இளைஞர் மற்றும் விளை யாட்டுத்துறை அமைச்சின் கீழ் இயங்கும் தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வவு னியா மாவட்ட இளைஞர் கழக சம்மேளனத்தின் புதிய தலைவராக யுரேனஸ் இளை ஞர் கழகத்தின் தலைவர் கணேசலிங்கம் சிம்சுபன் ஏக மனதாக வவுனியா மாவட்ட இளைஞர்களால் தெரிவு செய் யப்பட்டுள்ளார்.

வவுனியா மாவட்ட இளை ஞர் கழக சம்மேளனத்தின் புதிய நிர்வாக தெரிவு நேற்று முன்தினம் முன்னாள் மாவட்ட சம்மேளனத் தலைவர் சிவ ரூபன் தலைமையில் வவு னியா தேசிய இளைஞர் சேவைகள் மன்ற மண்டபத் தில் நடை பெற்றது.

பிரதம விருந்தினர்களாக தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் வன்னி மாகாணப் பணிப்பாளர், இளைஞர் மற் றும் விளையாட்டுத்துறை அமைச் சின் வடமாகாண இணைப் பாளர் பாலித, வவுனியா மாவ ட்ட உதவிப்பணிப்பாளர் கே.டி சி. காமினி, மாவட்ட இளைஞர் சேவை அதிகாரி ஐ.சுகானி, வவுனியா மற்றும் செட்டிகுளம் இளைஞர் சேவை அதிகாரி சசிகரன், வவுனியா வடக்கு இளைஞர் சேவை அதிகாரி இல்ஹாம் மற்றும் வவுனியா தெற்கு இளைஞர் சேவை அதி காரி ஜயலத் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-299)



வவுனியா செட்டிகுளம் பிரதேச செயலாளரை இட மாற்றம் செய்தமைக்கு எதிர்ப்பு தெரிவித்து செட்டிகுளம் பிரதேச மக்களால் ஆர்ப்பாட்டம் நேற்று முன் னெடுக் கப்பட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஒருங்கி ணைப்புக் குழுத்தலைவரிடமும் அரச அதிபரிடமும், மகஜர் கையளித்தனர்.

# திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவர் பொலிஸாரால் கைது

(நெளுக்குளம்)
வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய இருவரை வவு னியா குற்றத்தடுப்பு பொலிஸார் கைது செய்துள்ளதாக தெரிவித் துள்ளனர்.

கடந்த ஒருவார காலப்பகுதி யில் வவுனியா வேப்பங்குளம், சாந்தசோலை, இறம்பைக்குளம் பகுதிகளில் மோட்டார் சைக் கிளில் சென்ற இரு நபர்கள் வீதியால் சென்ற பெண்களின் தங்கச் சங்கிலிகளை அறுத்துச் சென்றிருந்தனர்.

இது தொடர்பாக பாதிக்கப்பட்ட வர்கள் வவுனியா குற்றத் தடுப்பு பொலிஸாரிடம் முறை ப்பாடு செய்திருந்தனர்.

குறித்த முறைப்பாட்டிற்க மைய விசாரணைகளை மேற் கொண்ட பொலிஸார் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய தாக சந்தேகிக்கப்படும் மத வாச்சிப் பகுதியை சேர்ந்த இர ண்டு நபர்களை நேற்று கைது செய்ததுடன் அவர்களது உடைமையில் இருந்த கைக் குண்டு மற்றும் வாகன இலக் கத் தகடுகளையும் மீட்டுள் ளனர்.

அவர்களிடம் முன்னெடுக்க ப்பட்ட முதற்கட்ட விசாரணை களில் அறுக்கப்பட்ட தங்க நகைகள் கொழும்பு வெள்ள வத்தை பகுதியில் அடைவு வைக்கப்பட்டுள்ளமை தெரிய வந்துள்ளதாக பொலிஸார் தெரி வித்தனர். குறித்த கைது நடவ டிக்கை வவுனியா பொலிஸ் தலைமைப் பொறுப்பதிகாரி மானவடுவ தலைமையில் முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் ஆஜர் படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும்தெரிவித்தனர். (5-4-299)

# காணி ஆணையாளருக்கு உரிய அதிகாரங்கள் வழங்க மத்திய அரசாங்கம் இணக்கம்

(கண்டாவளை)
வடக்கு மாகாண காணி ஆணையாளருக்கு உரிய அதி காரங்களை வழங்குவதற்கு மத்திய அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக கடற் றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள் ளார்.

இது தொடர்பான கடிதம் சில தினங்களில் சம்பந்தப்பட்ட ஆணையாளருக்கு வழங் கப் படும் எனவும் தெரிவித் தார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாடளாவிய ரீதியில் உள்ள ஏனைய மாகாண ஆணை யாளர்களுக்கு வழங்கப்பட் டுள்ள அதிகாரங்களில் கணிச மானவை வடக்கு மாகாண ஆணையாளருக்கு வழங்கப் பட்டாமல் இருந்து வந்தது.

குறித்த விடயம் வடக்கு மாகாண காணி ஆணையா ளரினால் கடற்றொழில் அமை ச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது.

அதனையடுத்து குறித்த விவகாரத்தினை மத்திய அர சாங்கத்தின் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரை யாடி, குறித்த அதிகாரங்களை வழங்குவதற்கான ஏற்பாடு களை அமைச்சர் மேற்கொண் டுள்ளார். (5-315)

# கார்-மோ.சைக்கிள் விபத்து; பெண் ஒருவர் படுகாயம்

(நெளுக்குளம்)
வவுனியா பொலிஸ் நிலை யத்திற்கு முன்பாக நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற குடும்பப் பெண் ஒருவர் படுகாய மடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதி க்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

வவுனியாதலைமைபொலிஸ் நிலையத்திற்கு முன்பாக நேற் றுக் காலை மோட்டார் சைக்கி ளும் காரும் மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதன்போது மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த பெண் படுகாயமடைந்தார்.

காயமடைந்தவரை பொலி ஸார் வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

இவ்விபத்து தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாக தெரி வித்தனர். (5-4-299)

# கிளிநொச்சி மாவட்ட எல்லைக்குள் சாந்தபுரம் கிராமம்

(கண்டாவளை)
முல்லைத்தீவு மாவட்ட நிலப்பரப்பிலுள்ள சாந்தபுரம் உட்பட்ட சில கிராமங்களை கிளிநொச்சி மாவட்ட நிர் வாக எல்லைக்குள் முழு மையாக உள்வாங்குவது தொடர்பான நடவடிக்கை களை மேற்கொள்வதற்கு நேற்று கரைச்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் கூட்டத் தில் ஏகமனதாக தீர்மானிக் கப்பட்டுள்ளது. (5-4-315)




மன்னார் மாவட்ட பாதிக்கப்பட்ட குடும்பங்களு க்கான இணைப்பின் இணைப்பாளர் எஸ்.திலிபன் தலைமையில், அரசியல் கைதிகளை விடுதலை செய்யக்கோரி மன்னாரின் சில பிரதேசம், ஆலயங் களில் விளக்கேற்றும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

# ஸ்கந்தபுரத்தில் இலங்கை வங்கியின் நடமாடும் சேவை ஆரம்பம்

(அக்கராயன்)
கிளிநொச்சி ஸ்கந்தபுரத் தில் இலங்கை வங்கி தனது நடமாடும் சேவையினை ஆரம்பித்துள்ளது. கடந்த பத்தாண்டுகளாக இலங்கை வங்கி கிளையொன்றினை அக்கராயன் பிரதேசத்தில் இயங்க வைக்குமாறு அக்க ராயன் பிரதேச பொது அமை ப்புகள் இலங்கை வங்கியிடம் மனுக் கையளித்திருந் தன.

வன்னேரிக்குளம், ஆனை விழுந்தான்குளம், அக்கராயன், ஸ்கந்தபுரம், கண்ணகை புரம், கோணாவில், முக் கொம்பன், முல்லைத்தீவின் கோட்டைக்கட்டியகுளம், அம் பலப்பெருமாள்குளம், அமதி புரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 5ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் தமது வங்கி தேவைகளுக்கு கிளிநொச்சி நகரத்திற்கே சென்று வருகின்ற நிலையில் அக்கராயனில் இலங்கை வங்கி கிளை யொன்றினை அமைப்பதன் மூலம் மக்கள் பெரும் நன்மையடைவர் கள் என கையளிக்கப்பட்ட மனுக்களில் தெரிவிக்கப்பட் டிருந்தன.

இலங்கை மத்திய வங்கி தனது பதில் கடிதத்தில் எதிர் காலத்தில் அக்கராயனில் இல ங்கை வங்கிக் கிளையொ ன்றினை இயங்கவைப் பதற் கான நடவடிக்கையினை எடுப்பதாக தெரிவித்திருந்தது.

ஆனால் தற்போது இவ்வ ங்கி நடமாடும் சேவையை ஸ்கந்தபுரம், அக்கராயன் பகுதிகளில் ஆரம்பமாகவுள் ளது.

எனினும் அக்கராயனில் இலங்கை வங்கி கிளை யொன்றினை ஆரம்பிக்க வேண்டும் என்பது பொது அமைப்புகளின் கோரிக்கை யாகும். (5-4-350)

# இராசிபலன்

30.01.2021
தை 17, சனிக்கிழமை
துதியை முன்னிரவு 11.52 மணிவரை
மகம் பின்னிரவு 4.11 மணிவரை
சுபநேரம் 3.36 - 5.06 மணிவரை
இராகுகாலம் 9.36-11.06 மணிவரை
சந்திராஷ்டமம்:- திருவோணம் வளவன்

**மேஷம்** — பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், புண்ணிய காரியங்களில் நாட்டம் காட்டுவீர்கள்.

**ரிஷபம்** — பெற்றோரின் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, நண்பர்கள் சந்திப்புண்டு.

**மிதுனம்** — இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும்.

**கடகம்** — குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், போசன சுகமுண்டு.

**சிம்மம்** — நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள், குடும்பச் சுமை கூடும்.

**கன்னி** — அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவுகள் ஏற்படலாம், சுப விரயங்கள் கூடும்.

**துலாம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், தொழில் முன்னேற்றகரமாக அமையும், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வழிபாட்டில் ஆர்வம் கூடும்.

**விருச்சிகம்** — சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காண்பீர்கள், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், பணத் தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், போசன நன்மையுண்டு.

**தனுசு** — உதாசினப்படுத்தியவர்கள உதவி கேட்டு வரலாம், வழிபாடு ஆனந்தம் தரும், அரைகுறையாக இருந்த வேலைகளை மீதியும் தொடர்வீர்கள், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** — கவலைகள் தீர கண்ணனை வழிபட வேண்டிய நாள், சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம்.

**கும்பம்** — இனிய அனுபவங்கள் ஏற்படலாம், மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், களஸ்திர நன்மையுண்டு.

**மீனம்** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

கடுமையான உழைப்பைத் தவிர வெற்றிக்கு வேறு வழியில்லை

## காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளருக்கு நீதி கோரி
# ஊடக அமைப்புக்கள் போராட்டம்



(கொழும்பு)
கடத்தப்பட்டு காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர் பிரகித் எக்னலிகொடவுக்கு நீதி கோரி மட்டக்களப்பில் கண்டன ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

ஊடக அமைப்புக்கள் இணைந்து நடத்திய இந்த ஆர்ப்பாட்டமானது மட்டக்களப்பு காந்திபூங்கா முன்பு நேற்று முற்பகல் 10.30 மணியளவில் ஆரம்பமானது.

உழைக்கும் ஊடக தொழிற் சங்க சம்மேளனம், கிழக்கு மாகாண தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் ஆகியவை இணைந்து இந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தன.

இதன்போது, 'காணாமலாக்கப்பட்ட ஊடகவியலாளர்களுக்கு நீதி வேண்டும்', 'சர்வதேசமே பதில் சொல்', 'காணாமல் ஆக்கப்பட்ட ஊடகவியலாளர் எங்கே?', 'படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நீதியைப் பெற்றுக்கொடு' போன்ற கோசங்களை எழுப்பி நீதி கோரியுள்ளனர். (நி-4)

# பேருந்து கவிழ்ந்து விபத்து 13 பயணிகள் படுகாயம்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு கொழும்பு நெடுஞ்சாலையின் புனானைப் பகுதியில் நேற்று தனியார் பேருந்தொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக வாழைச்சேனை போக்குவரத்துப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தில் பேருந்திலிருந்த 13 பேர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர்களில் 3 பேர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

பொலநறுவையில் இருந்து கல்முனை நோக்கிப் பயணித்த தனியார் பேருந்து நேற்றுக் காலை 6.30 மணியளவில் புனானைப் பிரதேசத்தில் முன்னால் சென்ற வாகனத்தை முந்திச் செல்ல முற்பட்டபோது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியை விட்டு விலகி இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பில் வாழைச்சேனை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)


# அமுத விழா வாழ்த்து

## இராசதுரை கணேசராசா
(ஓய்வுநிலை அதிபர்,
யா/சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை)

இன்று அமுத விழாக் காணும் ஓய்வுநிலை அதிபரும் சமூக சேவகனும் சிறந்த தமிழ் ஆசானும் பேச்சாளனும் தேடலின் விடிவெள்ளியும் நடமாடும் நூலகமாகவும் சிறந்த வழிகாட்டியாகவும் திகழும் இராசதுரை கணேசராசா அவர்களை பல்லாண்டு காலம் கணபதியின் ஆசியுடன் ஆரோக்கியமாகவும் மகிழ்வுடன் வாழ உளமார வாழ்த்துகின்றோம்.



Our Best Wishes

வாழ்த்தும் நல்லுறவுகள்,
நா.துஷி, ச.லதா, அ.சுபா, உ.கலைவாணி, அ.விஜி,
அ.சுதா, சு.சாந்தன், ச.வினோதினி, அ.அனுலா.

(6451)

# முக்கிய கேந்திர மாவட்டமாக யாழ்ப்பாணமும் தெரிவு

(யாழ்ப்பாணம்)

நாட்டின் முக்கிய கேந்திர மாவட்டங்களாக கொழும்பு, அம்பாந்தோட்டை, திருகோணமலை ஆகியவற்றுடன் யாழ்.மாவட்டமும் உள்ளடக்கப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத்தலைவருமான அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை யாழ். நகரில் இடம்பெற்ற நெடுந்தூர பஸ் சேவை ஆரம்ப நிகழ்வில் விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

அனைவரதும் ஒத்துழைப்பு மற்றும் பங்களிப்பு தான் யாழ் நகர அபிவிருத்தியில் புதியதொரு மைல்கல்லை எட்டக் காரணமாக அமைந்துள்ளது. எதிர்காலத்தில் யாழ்.மாவட்டத்தையே முழுமையாக அபிவிருத்தி அடைந்த மாவட்டமாக மாற்றுவதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபை பாரிய திட்டமிடலை மேற்கொண்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தை கொழும்பு, திருகோணமலை, அம்பாந்தோட்டை மாவட்டங்களோடு சேர்த்து முக்கிய கேந்திர மாவட்டமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

கேந்திர மாவட்டங்களுக்கான சிறந்த திட்டமிடல்களை தயார் செய்து அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள தயாராக இருக்கிறோம். அதற்கு நகர அபிவிருத்தி அதிகாரசபையும் பாரிய பங்களிப்பினை வழங்கி வருகிறது என தெரிவித்தார். (5-4-30)

# கல்லூரி வளாகத்தில் வெடி பொருட்கள் மீட்பு



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியில் கடந்த 25 ஆம் திகதி மைதான துப்புரவு பணியின் போது வெடிபொருட்கள் இனம் காணப்பட்டுள்ளன.

இந்நிலையில் குறித்த மோட்டார் குண்டுகள் மேலும் நிலத்தில் புதையுண்டு காணப்பட்டதால் நேற்று முன்தினம் நீதிமன்ற உத்தரவிற்கு அமைவாக அவற்றை தோண்டும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட படையினர் மற்றும் பொலிஸாரின் பாதுகாப்புடன் கனரக இயந்திரம் கொண்டு தோண்டப்பட்ட போது வெடிக்காத நிலையில் அதிகளவான மோட்டார் குண்டுகள் நூற்றுக் கணக்கில் மீட்கப்பட்டுள்ளன. (5-4-281)

# தேசிய பாடசாலைகள் என தரமுயர்த்தி மத்திய அரசின் கீழ் கொண்டுவருதல் அதிகாரப்பகிர்வுக்கு முரணான விடயம்

(யாழ்ப்பாணம்)

மாகாண பாடசாலைகளை தேசிய பாடசாலைகள் என்று தரமுயர்த்துவதாகக் கூறி அவற்றை மத்திய அரசு கையகப்படுத்துவது அதிகாரப்பகிர்வுக்கு முரணானதாகும் என வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், வடக்கு மாகாண ஆளுநர் திருமதி. பி.எஸ்.எம்.சாள்ஸ்க்கு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் வடக்கு மாகாண ஆளுநருக்கு அவைத் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்ட பாடசாலைகள் தேசியப் பாடசாலைகள் ஆக்கப்படுதல், யாழ்ப்பாண மாவட்டத்தின் பத்து பிரதான பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக மாற்றப்பட்டுள்ளன எனவும் அவை வடக்கு மாகாண சபை நிர்வாகத்தில் இருந்து மத்திய கல்வி அமைச்சின் கீழ் கொண்டு வரப்படுவதாகவும் அறிய வந்துள்ளது.

குறித்துரைக்கப்பட்ட பாடசாலைகள் அல்லாத அரச பாடசாலைகள் அரசியலமைப்பு ரீதியாக மாகாண சபைகளுக்கு கையளிக்கப்பட்ட விடயம் என்ற ரீதியில் இந்தப் பத்துப் பாடசாலைகளும் இதுவரை மாகாண கல்வி அமைச்சின் கீழ் நிர்வகிக்கப்பட்டு வந்தவையாகும்.

அவற்றை மத்திய அரசு கையகப்படுத்துவது அதிகாரப் பகிர்வுக்கு முரணானதாகும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வட மாகாண சபை இயங்கிய காலத்தில் இவ்வாறான முயற்சிகள் யாவும் இங்கே மறுதலிக்கப்பட்டமை சுட்டிக்காட்டப்பட வேண்டும்.

தேசியப் பாடசாலைகளுக்கு ஏதாவது மேலதிக வசதி வாய்ப்புக்கள் வழங்கப்படுவதாயின் அவற்றை மாகாண நிர்வாகத்தின் மூலம் வழங்க முடியும்.

இதுபோன்ற செயற்பாடுகள் மூலம் தேசிய பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய பாடசாலைகள் மாணவர்களிடையே ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கும் என்பது மறுக்க முடியாது.

தற்போது வடக்கு மாகாண சபையின் சட்டரீதியான நிறைவேற்று அதிகாரி என்ற வகையில் இந்த விடயத்தில் பொருத்தமான நடவடிக்கை எடுக்கும்படி தங்களை வேண்டிக்கொள்கின்றேன் என மேலும் தெரிவித்தார். (5-4-33)

# விஜியரட்ணம் ஞாபகார்த்த ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணம் 2021

சுண்டுக்குளி ஈகிள்ஸ்




வடமராட்சி வேங்கைகள்



நல்லூர் புரொன் கொல்




வடமராட்சி நோத்கொங்கிறஸ்



விஜியரட்ணம் ஞாபகார்த்த ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணம் 2021 தொடரானது 20 ஓவர்கள் கொண்ட போட்டியாகும்.

போட்டிகள் இன்று சனிக்கிழமை முதல் ஆரம்பமாகிறது.

அதனடிப்படையில் காலை 11 மணிக்கு சுண்டுக்குளி ஈகிள்ஸ் அணிக்கும் வடமராட்சி வேங்கைகள் அணிக்கும் தொடர்ந்து இரண்டாவது போட்டி பிற்பகல் 2 மணிக்கு நல்லூர் புரொன்கொல் அணிக்கும் வடமராட்சி நோத் கொங்கிறஸ் அணிக்கும் நடைபெறும்.


இத் தொடரில் முன்னிலை வகிக்கும் முதல் நான்கு அணிகள் play off சுற்றுக்கு தகுதி பெறும்.

மேலும் அனைத்து போட்டிகளும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என்று குறிப்பிடத்தக்கது. (4)

# சமூக ஊடக நிறுவனங்களின் தன்னிச்சையான முடிவுகள் ஆபத்தானது - ஐ.நா.எச்சரிக்கை

**(ஜெனிவா)**

**டுவிட்டர், பேஸ்புக் உள்ளிட்ட சக்திவாய்ந்த சமூக ஊடக நிறுவனங்களை ஒழுங்குபடுத்த சர்வதேச ரீதியில் பொதுவான ஒழுங்கு விதிகள் உருவாக்கப்பட வேண்டும் என ஐ.நா. பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்டரெஸ் அழைப்பு விடுத்துள்ளார்.**



அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் கணக்குகளை டுவிட்டர் நிறுவனம் முடக்கியதைச் சுட்டிக்காட்டிய அவர், ஒருவரின் கணக்கை தன்னிச்சையாக முடக்கும் அதிகாரம் ஒரு தனி நிறுவனத்துக்கு இருக்கக்கூடாது என்று தான் நம்புவதாகக் தெரிவித் தார்.

இந்த விடயத்தில் பொதுவான ஒரு பொறிமுறை உருவாக்கப்பட்ட வேண்டும், ஒருவரின் கணக்கை முடக்குவதற்கு பொதுவான ஒழுங்கு முறை வகுக்கப்பட வேண்டும். சட்டத்துக்கு ஏற்ப அந்த நடைமுறை அமைய வேண்டும் எனவும் அன்டோனியோ குட்டரெஸ் வலியுறுத்தினார்.

குறைந்த எண்ணிக்கையிலான நிறுவனங்கள் தன்னிச்சையாக தீர்மானங்களை எடுக்கும் சக்தியாக இயங்கும் உலகில் நாம் வாழ முடியும் என நான் நினைக்கவில்லை என நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து வெளியிட்ட குட்டரெஸ் சுட்டிக் காட்டினார்.-

அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ட்ரம்பின் கணக்கை இந்த மாத தொடக்கத்தில் டுவிட்டர் முடக்கியது. இதனால் அவரைப் பின்தொடர்ந்த 89 மில்லியன் பேருக்கும் அவருக்கும் இடையிலான தகவல் தொடர்புகள் உடனடியாகத் துண்டிக்கப்பட்டன.

இது அவரது ஜனாதிபதி பதவியின் ஒரு அடையாளமாகும். ட்ரம்பின் கணக்குகளை பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் சமூக ஊடகங்களும் இடைநீக்கம் செய்தன.

அமெரிக்க பாராளுமன்றக் கட்டடத்துக்குள் புகுந்து ட்ரம்ப் ஆதரவாளர்கள் நடத்திய வன்முறையைத் தொடர்ந்து மேலும் வன்முறைகள் தூண்டப்படுவதைத் தவிர்க்கும் நோக்கில் ட்ரம்பின் கணக்கு முடக்கப்பட்டதாக டுவிட்டர் தெரிவித்தது.

ஆனால் இது ஒருவரின் பேச்சுரிமையை மீறும் செயல் என பல்வேறு தரப்புக்கள் குற்றஞ்சாட்டியுள்ளன.

இந்நிலையில் சமூக ஊடக நிறுவனங்களின் தன்னிச்சையான தீர்மானிக்கும் சக்தி குறித்து கவலைப்படுகிறேன் என குட்டரெஸ் கூறினார்.

எங்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் சமூக ஊடகங்கள் தகவல்களைச் சேகரித்து வருகின்றன. இதனைக் கட்டுப்படுத்துவதற்கான உரிய பொறிமுறைகள் இல்லை. எங்களைப் பற்றி சமூக ஊடகங்கள் சேகரிக்கும் தரவுகள் வணிக நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன. இது அபாயகரமான, ஒருவரின் தனிப்பட்ட விடயங்களில் தலையிடும் போக்கை வெளிப்படுத்துகிறது. இது குறித்து தீவிரமாக விவாதிக்கப்பட வேண்டும் எனவும் அன்டோனியோ குட்டரெஸ் அழுத்தமாக வலியுறுத்தினார். (நி-4)

## ஈரானுடன் அணுஆயுத ஒப்பந்தத்தில் இணைய அமெரிக்கா தயார்



அனைத்து விதிகளுக்கும் ஈரான் ஒப்புக் கொண்டால் அமெரிக்கா அணுஆயுத ஒப்பந்தத்தில் இணைய தயாராக இருப்பதாக அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் ப்ளிங்கின் தெரிவித்துள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் ஆட்சியில் இருந்த போது, அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையிலான உறவில் விரிசல் ஏற்பட்டது.

இந்த உறவினை புதுப்பிப்பதற்கு ஜோ பிடன் நிர்வாகம் முயற்சி செய்து வருகின்றது. இந்தநிலையில் இதுகுறித்து ப்ளிங்கின் கூறுகையில்,

'அனைத்து விதிமுறை கட்டுப்பாடுகளுக்கும் ஈரான் ஒப்புக் கொண்டால் அணுஆயுத ஒப்பத்தத்தில் இணைவதில் அமெரிக்கா தயாராக இருக்கிறது என்பதில் ஜோ பிடன் 'தெளிவாக இருக்கிறார். இதனை ஈரானுடனான எங்களது உறவை மேம்படுத்தும் வாய்ப்பாக இதனைக் கருதுவோம்' என தெரிவித்தார்.

அமெரிக்கா உள்ளிட்ட 6 வளர்ந்த நாடுகளுக்கும் ஈரானுக்கும் இடையே கடந்த 2015 ஆம் ஆண்டு அணுசக்தி ஒப்பந்தம் கையெழுத்தானது.

இதன்படி ஆக்கபூர்வ தேவைகளுக்கு யுரேனியம் செறிவூட்ட ஈரானுக்கு அனுமதி வழங்கப்பட்டது. எனினும் அந்நாடு எவ்வளவு யுரேனியம் இருப்பு வைத்துக் கொள்ளலாம், எந்த அளவுக்கு அதை செறிவூட்டலாம் என்ற வரம்பு விதிக்கப்பட்டது.

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்ற பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறைபாடுகள் உள்ளதாக கூறி அதிலிருந்து விலகினார்.

மேலும், ஈரான் மீது மீண்டும் பொருளாதார தடைகளை விதித்து வந்தார். இதனால் ஆத்திரமடைந்த ஈரான், அணுசக்தி ஒப்பந்த விதிகளை அடுத்தடுத்து மீறியமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## முடக்கல் நிலைகளை எதிர்த்து ஆர்ப்பாட்டம் ஒருவர் பலி, 100 இற்கு மேற்பட்டோர் காயம்

(திரிபோலி)

லெபனான் நகரமான திரிபோலியில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆர்ப்பாட்டங்களில் பாதுகாப்பு படையினருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்குமிடையிலான மோதல்களின்போது நேற்று முன்தினம் வியாழக்கிழமை ஒருவர் உயிரிழந்துள்ளார்.



இந்நிலையில் அவரது இறுதிச் சடங்கில் பலர் அணிவகுத்துச் சென்றுள்ளனர்.

கொவிட்-19 தொற்றினால் தொடர்ச்சியான முடக்கல் நிலைகள் லெபனானில் அமுல்படுத்தப்படுகிறது. இதன் காரணமாக வாழ்வாதாரங்களை இழந்த மக்கள் ஆத்திரமடைந்த நிலையிலேயே ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

இதன்போது வடக்கு நகரத்தின் அரசாங்க கட்டடத்தை எதிர்ப்பாளர்கள் தாக்க முயன்றதால் பொலிஸார் நேரடி தோட்டாக்கள் பிரயோகத்தை மேற்கொண்டதாக ஆதாரங்கள் கூறுகின்றன.

இதனால் 100 க்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்ததாக லெபனான் செஞ்சிலுவை சங்கம் தெரிவித்துள்ளது.

லெபனானின் ஏழ்மையான நகரங்களில் ஒன்றில் அமைதியின்மை ஏற்பட்ட நான்காவது இரவு இது, கொவிட்-19 எழுச்சியைக் கட்டுப்படுத்த அரசாங்கம் 24 மணி நேர ஊரடங்கு உத்தரவை விதித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)


## கொரோனா வைத்தியசாலையில் தீ நோயாளர்கள் நால்வர் உயிரிழப்பு

(புக்கரெஸ்ட்)

ருமேனியாவின் தலைநகர் புக்கரெஸ்டில் அமைந்துள்ள வைத்தியசாலையொன்றில் நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை ஏற்பட்ட தீ விபத்தில் நான்கு கொரோனா நோயாளர்கள் உயிரிழந்துள்ளனர்.

வைத்தியசாலையின் தரைதளத்தில் தீ விபத்து ஏற்பட்டதையடுத்து 100 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் பாதுகாப்பாக கட்டடத்திலிருந்து வெளியேற்றப்பட்டனர். (நி-4)

# அகிம்சை வழியில் நின்று அறப்போராட்டம் நிகழ்த்திய காந்தியடிகளார்



மகாத்மா காந்தியின் 73 ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்
பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

எனும் குறளுக்கு இலக்கணமாக வாழ்ந்தவர் காந்தியடிகள். தான் வாழ்ந்த காலத்தில் உலகையே தன்பக்கம் திருப்பியவர் அண்ணல் காந்தியடிகள். அல்லும் பகலும் பாரத நாட்டின் விடுதலைக்காக தம் உடல், பொருள், ஆவி ஆகிய மூன்றையும் துறந்தவர் அவர். அவருடைய பூதவுடல் இவ்வுலகை விட்டு மறைந்தாலும் அவருடைய புகழ் இன்றும் இம்மண்ணில் நிலைபெற்றுத் தான் இருக்கின்றது.

அண்ணல் காந்தியடிகள் சத்தியத்தையும் அகிம்சையையும் இரண்டு கண்களாகப் போற்றியவர். இந்த இரண்டு ஆயுதங்களைப் பயன்படுத்தித் தான் அவர், கையில் கொடிய துப்பாக்கிகளை ஏந்திய வெள்ளையரை வென்றார். சத்தியம், அகிம்சை இந்த இரண்டையும்விட வலிமை வாய்ந்தவை இவ்வுலகத்தில் வேறு எவையும் இல்லை என்பது அண்ணல் காந்தியடிகளின் ஆணித்தரமான நம்பிக்கை.

அண்ணல் காந்தியடிகள் சுய தூய்மைக்குப் பதினொரு விரதங்களைக் கடைப்பிடித்தார். இதன்மூலம் ஒருவர் சக்தியை உணரமுடியும். சத்தியம், அகிம்சை, திருடாமை, உடைமை உணர்வை விடுதல், உடலுழைப்பு, சுதேசி, அஞ்சாமை, மேல் கீழ் எண்ணாமை, புலனடக்கம், சர்வசமய சமரசம், பிரம்மச்சரியம் என்பனவே அவர் கடைப்பிடித்த மகா விரதங்கள் ஆகும்.

சிறந்த சமூக சீர்திருத்தவாதியான காந்தி மக்கள் நலமாக வாழ்வதற்கு பல நல்ல சீர்திருத்தங்களைக் கொண்டு வந்தார். அவரை பற்றி இக்கட்டுரையில் நோக்குவோம்.

**ஒற்றுமை**

மக்களிடையே ஒற்றுமையைச் சட்டத்தின் மூலம் உருவாக்க முடியாது. அன்பின் மூலம், நல்ல நம்பிக்கையின் மூலம்தான் உண்டாக்கமுடியும் என்று நம்பினார் காந்தியடிகள். மதங்களாலும் மொழியாலும் வேறுபட்டிருந்தாலும் நாம் அனைவரும் இந்நாட்டு மக்கள் என்ற ஒருமை உணர்வு கொள்ளவேண்டும். இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் யாவரும் இந்தியர் என்னும் இன உணர்வுடன் வாழவேண்டும் என்று அண்ணல் காந்தியடிகள் விரும்பினார். தன்னால் இயன்றவரையில் நாட்டுமக்களின் ஒற்றுமைக்குப் பாடுபட்டார்.

**தீண்டாமை விலக்கு**

இந்து சமயத்திற்கு ஒரு பெரும் கறையாகத் தீண்டாமை இருக்கிறது. அனைத்து மனிதர்களும் பிறப்பாலும் இறப்பாலும் சமமானவர்களே. தீண்டாமை என்ற சிந்தனை கொடிய குற்றமாகும். தீண்டாமை எனும் இழி கொள்கை நாட்டில் இருக்கக்கூடாது. மனிதர்களுள் சிலரைத் தீண்டாமை என்ற பெயரால் வெறுத்து ஒதுக்குவது பாவம் என்றார் காந்தியடிகள். தீண்டத்தகாதவர்களை அவர் அரிசனங்கள் என்று அழைத்தார். 'அரிசனங்கள்' என்றால் கடவுளின் குழந்தைகள் என்று பொருள். தீண்டாமை என்பது சமுதாயத்தைச் சீர்குலைத்துவிடும். எனவே தீண்டாமையை மனித குலத்தை விட்டே ஓட்ட வேண்டும் என்றார் காந்தியடிகள்.

**மதுவிலக்கு**

மனிதன், மது என்னும் அரக்கனின் வாயில் அகப்பட்டு எத்துணை துயரங்களை அனுபவிக்கின்றான். மது அருந்துவதால் அவன் மட்டுமல்ல அவனுடைய குடும்பமே நடுத்தெருவிற்கு வருகிறது. மதுவின் சீர்கேடுகளை நாம் நாள்தோறும் காண்கின்றோம் அல்லவா?

தனது கவலையை, துன்பத்தை மறக்க மது அருந்தும் பழக்கத்தை ஏற்படுத்திக்கொள்கிற மனிதன் மடையரிலும் மடையனாவான். திருட்டு, கொலை, கொள்ளை போன்ற பல தீய செயல்களுக்கு மனிதனை ஆட்படுத்தும் மது அருந்தும் பழக்கத்தை மனிதன் விட வேண்டும்.

**பெண்களின் முன்னேற்றம்**

பெண் முன்னேறினால்தான் நாடு முன்னேறும். பெண் பிறவி இழிந்தது என்ற மடமை உணர்வு மனித குலத்தின் வீழ்ச்சிக்கே காரணமாகும் என அண்ணல் திடமாக எண்ணினார். அதனால் அவர் மகளிர் முன்னேற்றத்தில் பேரீடுபாடு காட்டினார். ஆண்களுக்குச் சமமாகப் பெண்களும் உயரும் நிலையை அவர் விரும்பினார். பெண் கல்வியைப் பேணி வளர்த்தார். குழந்தைகளுக்குத் திருமணம் செய்விப்பதை அவர் கண்டித்தார். திருமணப் பருவம் அடைந்த பின்புதான் திருமணம் செய்து கொள்ள வேண்டும் என அவர் கூறினார். பெண்கள் அணிகலன்களின் மீது பேராசை கொண்டு நகை தாங்கிகளாக இருக்கக் கூடாது எனக் காந்தி விரும்பினார்.

இத்தகைய பல சீர்திருத்தங்களை அவர் ஏற்படுத்தினார். அவற்றைக் கடைப்பிடிப்போர் நல்வாழ்வு வாழ்ந்து வருகின்றனர்.

எல்லோருக்கும் சமமாகப் போராடிய பெரியவரின் திடீர் மறைவைக் கேட்டு இந்திய நாடே சோகத்தில் ஆழ்ந்தது. இந்தியத் தலைவர்கள் மட்டுமன்றி உலகத் தலைவர்களும் கண்ணீர் சிந்தினர். " அண்ணல் காந்தியடிகள் அளவுக்கு மீறி நல்லவராக இருந்ததன் விளைவாகத்தான் சுடப்பட்டார்" என்று தமது இரங்கல் உரையில் தெரிவித்திருந்தார் ஜார்ஜ் பேர்னாட்ஷா. அது மிகப்பெரிய உண்மையல்லவா?

சரியாக சிந்திக்காத சொல் எதுவும் என் நாவிலிருந்தோ பேனாவிலிருந்தோ வெளிவருவதே இல்லை.

-மகாத்மாகாந்தி-

எம்.ஷாந்தன் சத்தியகீர்த்தி
ஆசிரியர், "காந்தீயம்"
அகில இலங்கை காந்தி சேவா சங்கம்.

## ஐ.டி.எச்சின் தீவிர சிகிச்சை பிரிவில் சுகாதார அமைச்சர் பவித்ரா



(கொழும்பு)


சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி, அங்கொடவில் அமைந்துள்ள தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கொரோனா தொற்றுக்குள்ளான அமைச்சர் ஹிக்கடுவவில் உள்ள ஒரு சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வந்தார். இந்நிலையில் நேற்று முன்தினம் காலை அவர் கொழும்பின் புறநகர் பொரலஸ்கமுவையில் அமைந்துள்ள சேர் ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

எனினும் அவர் அதிகளவான கோவிட்-19 அறிகுறிகளை வெளிப்படுத்தியதன் காரணத்தினால் நேற்று முன்தினம் மாலை தேசிய தொற்று நோயியல் வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (நி-4)

## சுதந்திர தினத்தை முன்னிட்டு

## ட்ரோன்கள்,பட்டங்கள்,பலூன்கள் பறக்க விடுவது தடை செய்யப்பட்டுள்ளது



(கொழும்பு)

கொழும்பு வான் பரப்பில் ட்ரோன் கமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதை தவிர்த்துக் கொள்ளுமாறு இலங்கை விமானப் படை தலைமையகம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாட்டின் 73ஆவது தேசிய சுதந்திர தின பிரதான நிகழ்வுக்கான ஒத்திகையில் விமானப் படை விமானங்கள் நேற்று முன்தினம் முதல் கொழும்பு வான் பரப்பில் தனது வான்சாகச ஒத்திகையை ஆரம்பித்துள்ளது.

பெப்ரவரி 4ஆம் திகதி வரையான காலப்பகுதியில் மேற்படி வான்பரப்பில் ட்ரோன் கமராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதை முழுமையாக தவிர்த்துக் கொள்ளுமாறு பொதுமக்களிடம் வேண்டிக் கொள்வதாக இலங்கை விமானப் படையின் பேச்சாளர் தெரிவித்தார்.

ஒத்திகை காரணமாக விமானப் படையின் விமானங்கள் கொழும்பு வான் பரப்பில் மிகவும் தாழ்வாக பறக்கின்ற நிலையில் ட்ரோன் கமெராக்கள், பட்டங்கள் மற்றும் பலூன்களை உயர பறக்கவிடுவதானது மேற்படி விமானங்களுக்கு பாரிய ஆபத்தாக அமையலாம் என்று தெரிவித்த அவர், இதனால் ஏற்படக் கூடிய ஆபத்தை முன்கூட்டியே தவிர்க்கும் வகையிலேயே மேற்படி வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# இலங்கையின் மனித உரிமை மீறல்கள் மிகுந்த வேதனை தருகிறது-ஜேர்மனி

(பேர்லின்)

**"ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் வெளியிட்டுள்ள அறிக்கை, இலங்கையின் மனித உரிமைகளின் நிலைமை குறித்து மிகுந்த கவலையை ஏற்படுத்தியுள்ளது" என ஜேர்மனியின் தெற்காசிய விவகாரங்களிற்கான மனித உரிமைகளிற்கான செயலாளர் போர்பெல் கோஃப்லர் இதனை தெரிவித்தார்.**

தனது டுவிட்டர் பக்கத்தில் விடுத்துள்ள பதிவில் அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கு ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையுடன் ஜேர்மனி உறுதியுடன் இருப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்".

இதேவேளை, ஜெனிவாவில் எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பான அறிக்கையொன்றை மனித உரிமைகள் ஆணையாளர் மிச்சேல் பச்லெட் சமர்ப்பிக்கவுள்ளார்.

அவ்வறிக்கையில், சுமார் 37 வருடங்களாக நடைபெற்ற போரின் இறுதிக்கட்டத்தில் கொல்லப்பட்ட பல்லாயிரக்கணக்கான பொதுமக்களுக்கான நீதியை உறுதி செய்வதற்கு தவறியுள்ளமை தொடர்பில் அவர் இலங்கை மீது குற்றஞ் சுமத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-4)

# மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க பாடசாலைகளுக்கு உதவும் அமெரிக்கா



(கொழும்பு)

வலய, மாகாண கல்வி மற்றும் சுகாதார சேவைகள் அதிகாரிகளுடன் ஒருங்கிணைந்து நாடு முழுவதும் 120 பாடசாலைகளில் சுகாதார அறைகளை அமைத்து மாணவர்களின் ஆரோக்கியத்தை பாதுகாக்க உதவுவதற்கான முன்னெடுப்பொன்றை அமெரிக்கா மேற்கொண்டுள்ளது.

கொவிட்-19 இற்கு எதிரான அடிப்படை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை உறுதிப்படுத்துவதற்கான கல்வி அமைச்சின் பரிந்துரைகளை இந்த சுகாதார அறைகள் ஊக்குவிப்பதுடன் படுக்கைகள், மெத்தைகள், முதலுதவி உபகரணங்கள், நகர்த்தக்கூடிய மறைப்புத் திரைகள் மற்றும் நீர் விநியோகிப்பான்கள் ஆகியவற்றை இவை கொண்டிருக்கும்.

தேவைப்படும் பட்சத்தில் இந்த அறைகள் மாணவர்களுக்கான தனிமை மற்றும் தொடர்புடைய கவனிப்பையும் வழங்கும்.

இந்த சுகாதார அறைகள் கொவிட் தொற்று நோய் பரவல் முடிவடைந்த பின்னரும் கூட மாணவர்களின் நல்வாழ்வை ஊக்குவிக்கும். (நி-4)

# அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி முதலில் இராணுவ வீரர்களுக்கு செலுத்தப்பட்டது

(கொழும்பு)

இந்தியாவினால் வழங்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி விநியோக நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் கொழும்பில் உள்ள இராணுவ வைத்தியசாலையில் மூன்று இராணுவ வீரர்களுக்கு அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி முதன்முதலில் செலுத்தப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக மேல் மாகாணத்தின் ஆறு முக்கிய வைத்தியசாலைகளில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைவாக இந்திய அரசாங்கத்தினால் 5 இலட்சம் சீரம் நிறுவனம் உருவாக்கியுள்ள அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் எனும் தடுப்பூசிகள் நன்கொடையாக வழங்கப்பட்டது. (நி-4)




# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நிகழ்காலம்

ஒரு மலைப் பகுதி. அங்கே ஒரு ஞானி இருந்தார். அவர் பெயர் ரின்சாய். புகழ் பெற்ற ஞானி. ஓர் இளைஞன் அவரைத் தேடிக்கொண்டு வந்தான்.

"என்னப்பா சமாச்சாரம்?" என்று கேட்டார்.

"ஐயா...நான் உண்மையைத் தேடிக்கொண்டிருக்கிறேன். அப்படி தேடிக் கொண்டிருக்கும் போது நீங்கள் கிடைத்திருக்கிறீர்கள். நான் ரொம்பத் தூரத்திலிருந்து வருகிறேன்" என்று ஆரம்பித்து விபரமாகச் சொன்னான்.

உடனே அந்த ஞானி...

"சரி...அந்த உண்மை சமாச்சாரத்தை எல்லாம் இப்போதைக்கு விட்டுவிடு. நீ இப்போது பீகிங்கிலேயிருந்து வருகிறதனாலே தெரிந்து கொள்ள வேண்டியிருக்கு. பீகிங்கிலே இப்போ அரிசி விலை எப்படி இருக்கு?" என்றார்.

இதைக் கேட்டதும் வந்த இளைஞன் திகைத்துப் போய் நின்று விட்டான். ஒரு மகா ஞானியிடமிருந்து இப்படி ஒரு கேள்வியை அவன் எதிர்பார்க்கவேயில்லை.

பீகிங்கிலே உள்ள அரிசி விலைக்கும் இவருக்கும் என்ன சம்பந்தம் என்று அவனுக்குப் புரியவில்லை. அங்கே அரிசி என்ன விலை விற்கிறது என்பது இங்கே ஒரு சாதாரண விடயம்.

வந்த இளைஞனோ மிக உயர்ந்த உண்மையைத் தேடிக்கொண்டு வந்திருக்கிறான். அப்படி வந்தவனிடம் இப்படி ஒரு கேள்வியை கேட்டு விட்டாரே? இப்படிக் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை.

மெதுவாகச் சொன்னார்... "சுவாமி என்னை மன்னித்துக் கொள்ளவும். மரியாதைக் குறைவாகப் பேசுறதாக நினைத்துவிடக் கூடாது. இது மாதிரியான கேள்விகளை இனிமேல் என்னிடம் கேட்காதீர்கள். ஏனென்றால் என்னிடம் எந்த இறந்த காலமும் இல்லை. என் கடந்த காலப் பாதைகளை நான் மறந்து விட்டேன். கைகழுவி விட்டேன். நான் கடந்து வந்த பாலங்களை எரித்து விட்டேன். ஏறி வந்த ஏணிகளை உதறித் தள்ளி விட்டேன். இறந்த காலத்தைப் பொறுத்த வரையில் நான் இப்போது இறந்து போனவன். இதோ...இப்போ...கடந்து போன கணத்தில கூட நான் இறந்து போனவன் தான்" என்றார்.

இதைக் கேட்டதும் அந்த ஞானியிடம் வந்தார். இவன் தோளிலே தட்டிக் கொடுத்தார். உட்காரப்பா...இனிமேல் நாம் உண்மையைப் பற்றிப் பேசுவோம். நீ கடந்த காலங்களைத் தூக்கிக்கொண்டிருக்கிறாயா? இல்லையா? என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் அரிசி விலை என்ன என்று கேட்டேன்.

நீ அதைச் சொல்லியிருந்தால் உடனே உன்னை விரட்டியிருப்பேன். உண்மையைப் பற்றிப் பேச மறுத்திருப்பேன். இறந்த காலத்தை பற்றிக் கொண்டிருப்பவனால் உண்மையை உணர முடியாது.

ஏனென்றால் உண்மை என்பது இதோ...இப்போ...இங்கே...இந்தக் கணத்திலே இருக்கிறது. உண்மை என்பது இறந்த காலத்தோடோ எதிர்காலத்தோடோ சம்பந்தப்பட்டதல்ல.

உண்மை காலம் கடந்தது, காலமற்றது. இறந்த காலத்தில் வாழ்கிறவனாலே நிகழ்காலத்தை உணர முடியாது. உண்மையும் காலமும் ஒன்று சேர்ந்து நடக்காது என்று விளக்கம் கொடுத்தார்.

நிகழ்காலத்திலே வாழத் தெரியாத மனிதரை ஒரு தோட்டத்துக்கு அழைத்துக் கொண்டு போங்கள். ஒரு ரோஜா மலரை அவரிடம் காட்டுங்கள். "பாருங்க எவ்வளது அழகான ரோஜா பூ" என்று சொல்லுங்கள். உடனே அவர் என்ன சொல்லுவார் தெரியுமா?

"இதனாலே என்ன பிரயோசனம். மாலையாவதற்குள்ளே எல்லாம் உதிர்ந்து போய்விடுமே" என்பார். "இளமை எவ்வளவு சுகம்" என்று சொல்லுங்கள். "விரைவில் முதுமை வந்திடும்" பார். மகிழ்ச்சியைப் பற்றிப் பேசினால் "அது ஒரு மாயை விலகிப் போய்க் கொண்டே இருக்கும்" பார்.

ஆனால் நிகழ்காலத்தில் வாழத் தெரிந்த ஒரு மனிதரை ஒரு பூங்காவுக்கு அழைத்துக்கொண்டு போங்கள். வண்ண மலர்களோடு அவர் ஆடிப்பாடி மகிழ்வார். "நான் ஏன் வராத மாலைப் பொழுதைப் பற்றி கவலைப்பட வேணும்" பார்.

இந்த மலர்கள் உதிர்ந்தே போறதாக இருந்தால்கூட இப்போ அதைப்பற்றி என்ன? இப்போ எவ்வளவு அழகா இருக்கு என்பார். இதைவிட ஆச்சரியம் என்னவென்றால், மாலை அந்த மலர்கள் உதிரும் போதும் இவர் அதே உற்சாகத்துடன் இருப்பார். மலரும் பூக்கள் தான் கவர்ச்சியா? உதிரும் பூக்களும் அழகுதான் என்பார்.

ஒரு அம்மா காடு மேடெல்லாம் அலைந்து கடைசியாக ஒரு சாமியாரைக் கண்டு பிடித்தார். என்ன விடயம் என்று கேட்டார் அவர், "நான் உண்மையைத் தேடி அலைந்து கொண்டிருக்கிறேன்" என்றார். "என்ன உண்மை" என்றார்.

5 வருடத்திற்கு முன்னர் ஒருநாள் என் வீட்டுக்காரர் மீது கரண்டியை வீசி விட்டேன். உடனே அவர் கோபித்துக்கொண்டு வீட்டை விட்டு ஓடிப்போய் விட்டார். அவர் கிடைப்பாரா? என்று உங்களைக் கேட்கிறதற்காக வந்தேன் என்றார். "இனிமேல் நீ அது மாதிரி எதையும் அவர் மீது வீசமாட்டேன் என்று உறுதிமொழி கொடுத்தால் அவர் உனக்குக் கிடைப்பார்" என்றார்.

"உறுதிமொழி கொடுக்கிறேன்" என்றார். "அப்படியென்றால் புறப்படு நான்தான் உன் வீட்டுக்காரர்" என்று சொல்லி வேசத்தைக் கலைத்து விட்டு புறப்பட்டார்.

# உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் தெரிவு முறையும் தேர்தல் நடைமுறைகளும் (2017 வரை)

12

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



**புதிய பிரதேசச் சபை சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தேர்தல்கள் நடத்துவதற்கு 1987ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12 ஆம் திகதி 12 மாநகர சபைகளுக்கும் 39 நகர சபைகளுக்கும் மற்றும் 257 பிரதேச சபைகளுக்கும் வேட்புமனுக்கள் கோரப்பட்டு, ஜூன் 26 முதல் ஜூலை 3 வரை வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டன. அதில் 2 மாநகர சபைகளுக்கும் 5 நகர சபைகளுக்கும் 68 பிரதேச சபைகளுக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள்.**

2 மாநகர சபைகளுக்கும் 4 நகர சபைகளுக்கும் 36 பிரதேச சபைகளுக்கும் யாரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை. இவை யாவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த 42 உள்ளூராட்சி மன்றங்களாகும்.

யாழ்ப்பாணம் மாநகர சபை, சாவகச்சேரி நகர சபை, பருத்தித்துறை நகர சபை, வல்வெட்டித்துறை நகர சபை, சாவகச்சேரி பி.தே.ச, நெடுந்தீவு பி.தே.ச, ஊர்காவற்றுறை பி.தே.ச, நல்லூர் பி.தே.ச, பருத்தித்துறை பி.தே.ச, வடமராட்சி தென்மேற்கு பி.தே.ச, வலிகாமம் கிழக்கு பி.தே.ச, வலிகாமம் வடக்கு பி.தே.ச, வலிகாமம் தெற்கு பி.தே.ச, வலிகாமம் தென்மேற்கு பி.தே.ச, வலிகாமம் மேற்கு பி.தே.ச, வேலணை பி.தே.ச ஆகிய யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்த சகல உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

**1987 ஆம் ஆண்டு ஜூன் மாதம் மாநகர சபைகளுக்கும், நகர சபைகளுக்கும் மற்றும் பிரதேச சபைகளுக்கும், வேட்பு மனுக்கள் கோரப்பட்டதில் 2 மாநகர சபைகளுக்கும் 4 நகர சபைகளுக்கும் 36 பிரதேச சபைகளுக்கும் யாரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை. இவையாவும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த 42 உள்ளூராட்சி மன்றங்களாகும். வட மாகாணத்தை பொறுத்தவரை வவுனியா மாவட்டத்தின் வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபைக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.**

கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்த உள்ளூராட்சிமன்றங்களான பச்சிலைப்பள்ளி, கரைச்சி, பூநகரி ஆகிய மூன்று பிரதேச சபைகள் மன்னார் மாவட்டத்தில் மன்னார், மாந்தை மேற்கு, முசலி, நானாட்டான் ஆகிய நான்கு பிரதேச சபைகள் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காய், புதுக்குடியிருப்பு, மாந்தை கிழக்கு, கரைதுறைப்பற்று ஆகிய நான்கு பிரதேச சபைகள் என்பவற்றிற்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

வவுனியா மாவட்டத்தில் வவுனியா நகர சபை,வவுனியா வடக்கு பி.தே.ச, வவுனியா தெற்கு (தமிழ்) பி.தே.ச.,வெங்கலச்செட்டிக்குளம் பி.தே.ச ஆகிய உள்ளூராட்சி மன்றங்களுக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை. (குறிப்பு -வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச சபைக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.)

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் திருகோணமலை மாவட்டத்தில் குச்சவெளி பிரதேச சபைக்கும் அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு மற்றும் திருக்கோவில் பிரதேச சபைகளுக்கும் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஏறாவூர் பற்று பி.தே.ச, கோறளை மேற்கு பி.தே.ச, மண்முனை தென் மேற்கு பி.தே.ச, மண்முனை தென், எருவில் பற்று பி.தே.ச, மண்முனை மேற்கு பி.தே.ச, போரதீவுப்பற்று பி.தே.ச ஆகியவற்றிற்கும் மட்டக்களப்பு மாநகர சபைக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை.

8 மாநகர சபைகளுக்கும் 30 நகர சபைகளுக்கும் 152 பிரதேச சபைகளுக்கும் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களால் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ரம்பேவ பிரதேச சபைக்கு வேட்பு மனு சரியான முறையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

**கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை 12 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. 11 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படவில்லை. 16 உள்ளூராட்சி மன்றங்களுக்கு வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள்.**

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படாத அல்லது சரியான முறையில் தாக்கல் செய்யப்படாத 43 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மீள வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. ஆனால் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ரம்பேவ பிரதேச சபைக்கு மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களால் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த 42 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் எவரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை.

வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு 1987ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் நாட்டின் பாதுகாப்பு காரணங்களினால் தேர்தல் கால வரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.

**வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்படாத அல்லது சரியான முறையில் தாக்கல் செய்யப்படாத 43 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் மீள வேட்பு மனுக்கள் கோரப்பட்டன. ஆனால் அநுராதபுர மாவட்டத்தில் உள்ள ரம்பேவ பிரதேச சபைக்கு மட்டும் ஒன்றுக்கு மேற்பட்ட குழுக்களால் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சார்ந்த 42 உள்ளூராட்சி மன்றங்களுக்கும் எவரும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யவில்லை. மேலும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு 1987 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி தேர்தல் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தபோதும் நாட்டின் பாதுகாப்பு காரணங்களினால் தேர்தல் காலவரையறையின்றி ஒத்தி வைக்கப்பட்டது.**

மாநகர சபைகளினதும் நகர சபைகளினதும் தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டதால் அதுவரை இயங்கிக்கொண்டிருந்த மாநகர சபைகளும் நகர சபைகளும் இயங்கிக் கொண்டிருந்தன. ஆனால் அவற்றில் இறப்பு, விலகல் போன்ற காரணங்களினால் 25 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவ் வெற்றிடங்களில் 22 வெற்றிடங்கள் தேர்தலுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அக்கட்சிகளின் வேட்பு மனுக்களில் கொடுக்கப்பட்டிருந்த வேட்பாளர்கள் மூலம் நிரப்பப்பட்டன. மற்றவை நிரப்பப்படவில்லை.

2 மாநகர சபைகளுக்கும் 5 நகர சபைகளுக்கும் 68 பிரதேச சபைகளுக்கும் வேட்பு மனுக்கள் தாக்கல் செய்தவர்கள் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டார்கள். அவ் உள்ளூராட்சி மன்றங்கள் அதன்பின் இயங்கத் தொடங்கின.

பிரதேச சபைத்தேர்தல்கள் நடைபெறாத காரணத்தால் 18 மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் காலம் நீடிக்கப்பட்டு அவை தொடர்ந்து இயங்கிக் கொண்டிருந்தன. வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இருந்த யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய ஆறு மாவட்ட அபிவிருத்திச் சபைகளும் கலைக்கப்பட்டிருந்ததால் அவை இயங்கவில்லை. (குறிப்பு- கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி சபை இருக்கவில்லை).

## 1990இல் உள்ளூராட்சி மன்றங்களின் நிலை

1987இல் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களுக்கு வேட்பு மனுக்கள் பெறப்பட்டு, தேர்தல்களை நடத்த முடியாதிருந்த 10 மாநகர சபைகளுக்கும் மற்றும் 30 நகர சபைகளுக்கும் 1990 இலும் தேர்தல் நடத்தமுடியவில்லை. இவற்றின் விடயத்தில் 1983இல் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபைகளின் ஆயுட்காலம் 1990.10.07 ஆம் திகதியிடப்பட்ட 362/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் கீழ், 1991, ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டது. அத்தகைய உள்ளூராட்சி சபைகளின் வெற்றிடங்களை நிரப்பும் முறை, உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் 65 ஆம் பிரிவின் மூலம் நிரப்பப்பட்டது.

1987 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் 2 மாநகர சபைகளுக்கும் மற்றும் 5 நகர சபைகளுக்கும் 68 பிரதேச சபைகளுக்கும் உறுப்பினர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதும் இக் கட்டுரையில் முன்னர் கூறப்பட்டிருந்தது. இவ்வாறு உருவாக்கப்பட்ட சபைகளில் 1990இல் பல வெற்றிடங்கள் காணப்பட்டன. இச் சபைகளின் வெற்றிடங்கள் உள்ளூர் அதிகார சபைகளின் தேர்தல்கள் கட்டளைச் சட்டத்தின் திருத்தப்பட்ட 65அ ஆம் பிரிவின் மூலம் நிரப்பப்பட்டது.

1990 ஆம் ஆண்டில் இச் சகல உள்ளூர் அதிகார சபைகளிலும் 37 வெற்றிடங்கள் ஏற்பட்டன. 4 உறுப்பினர்களின் மரணங்களும், 25 பேரின் இராஜினாமாவும் எஞ்சியோரின் தொடர்ந்து மூன்றுக்கு மேற்பட்ட அல்லது மூன்று மாதங்கள் கூட்டங்களுக்கு வரவின்மையும் இதற்கான காரணமாகும்.

(தொடரும்...)

# ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு வடகிழக்கிலுள்ள அனைத்து கட்சிகளும் ஆதரவு வழங்க வேண்டும்

## தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் அழைப்பு

(மட்டக்களப்பு)

வடக்கு, கிழக்கு சிவில் அமைப்புகள் முன்னெடுக்கும் ஜனநாயக ரீதியான போராட்டத்திற்கு வடகிழக்கிலுள்ள அனைத்துக் கட்சிகளும் அமைப்புகளும் ஆதரவு வழங்க முன்வரவேண்டும் எனத் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தேசிய அமைப்பாளர் தர்மலிங்கம் சுரேஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.


மட்டக்களப்பிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக தர்மலிங்கம் சுரேஸ் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்களுக்கு ஒரு நீதி கிடைக்க வேண்டும் என்பதற்காகவும் வடகிழக்கில் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற தீவிரமான நில ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தடுத்து நிறுத்தக் கோரியும் தமிழ் மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பேணுகின்ற இடங்கள் சிதைக்கப்படுவதனைத் தடுக்கும் முகமாகவும் பாதிக்கப்பட்டிருக்கின்ற மக்கள் சார்பாக ஐ.நா.மனிதவுரிமைப் பேரவையில் அரசியல் கட்சிகளாலும் சிவில் அமைப்புகளாலும் ஒருங்கிணைக்கப்பட்டு எங்களுடைய மக்களுக்கான சரியான நிரந்தரமான தீர்வைப் பெறுவதற்காக முன்வைக்கப்பட்டிருக்கின்ற பிரேரணையை வலுப்படுத்தும் முகமாகவும் வடக்கு, கிழக்கில் எதிர்வரும் 3 ஆம் திகதி தொடக்கம் 6 ஆம் திகதி வரை ஜனநாயக ரீதியான ஒரு போராட்டத்தை முன்னெடுப்பதற்கு அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள்.

ஆகவே இந்தப் போராட்டத்துக்கு அரசியல் பேதங்களை மறந்து தமிழர்கள் என்ற அடிப்படையில் வர்த்தக அமைப்புக்கள், பொது அமைப்புக்கள், மதகுருக்கள் என அனைவரும் ஒத்துழைப்பை வழங்க வேண்டும் என அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## இறை சக்தியை அதிகரிக்கும் கும்பாபிஷேகம்

**ஆ**லய வழிபாட்டில் ஒவ்வொரு செயலுக்கும் ஒரு தத்துவம் உண்டு. அந்தத் தத்துவங்கள் ஏராளமான இரகசியங்களையும் மர்ம முடிச்சுக்களையும் கொண்டது.

அந்த இரகசியங்களை முறைப்படி தெரிந்து கொண்டு ஆலய வழிபாட்டில் ஈடுபட்டால் நிச்சயமாக முக்தி பெற முடியும். இறைவனின் தாமரை திருவடியில் நம் ஆத்மாவை சரணடையச் செய்வதுதானே நமது இறை வழிபாட்டின் நோக்கம்.

இதற்காகத் தான் சுமார் மூவாயிரும் ஆண்டுகளுக்கு முன்பு ஆகம விதிகள் படி ஆலயங்களைக் கட்டிய நம் முன்னோர்கள் கருவறைக்கும் கருவறைக்குள் வீற்றிருக்கும் விக்ரகத்துக்கும் மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தனர். கருவறை விக்ரகங்கள் அனைத்தையும் நம் முன்னோர்கள் கல்லால் மட்டுமே உருவாக்கினார்கள்.

கல்லானது பஞ்ச பூதசக்திகளை நிரம்பப் பெற்றது. இதனால் கல்லானது எந்தப் பொருளையும் தன்வசம் இழுத்துக் கொள்ளக் கூடிய சக்தி வாய்ந்தது.

இத்தகைய சக்தி உலகில் இதுவரை எந்த உலோகத்திலும் கிடையாது. இந்த சூட்சுமத்தை நம் முன்னோர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிந்திருந்தனர்.

அதனால்தான் அவர்கள் ஆலயங்கள் கட்டப்பட்டதும் மூலவரை கல்லில் வைக்கும் வழக்கத்தை ஏற்படுத்தினார்கள்.

அதுமட்டுமல்ல அந்தக் கல்லில் இறை சக்தியை இறங்கச் செய்யும் அதிசயத்தையும் செய்து காட்டினார்கள். எங்கும் நிறைந்த பரம்பொருளை அந்தக் கல் மூலம் அருளச் செய்தனர்.

எனவே நாம் ஆலயத்துக்குச் சென்று வழிபடுவது வெறும் கல்லை அல்ல கடவுளை! ஆதிசங்கரர், ராமானுஜர், நாயன்மார்கள், ஆழ்வார்கள், ராமகிருஷ்ண பரமஹம்சர், விவேகானந்தர் போன்றோர் ஆலயங்களில் விக்ரக வழிபாடு செய்தே மேல் நிலைக்குச் சென்றனர்.

இவர்கள் கற்சிலைகள் மூலமே இறை அருளை முழுமையாகப் பெற்றனர். கல் சிலைக்கு எப்படி தெய்வ சக்தி கிடைக்கிறது? இந்தக் கேள்வி நிச்சயம் எல்லோரது மனதிலும் தோன்றியிருக்கும்.

உரிய முறையில் எல்லா விதிகளையும் சாஸ்திர சம்பிரதாயங்களையும் நூல் அளவு கூட தவறாமல் மிக மிக நேர்த்தியாக கும்பாபிஷேகம் செய்யப்படும் போது மூலஸ்தானத்தில் உள்ள கற்சிலை கடவுள் அருள் ததும்பும் சிலையாக மாறி விடும். ஒருவன் சாதாரண மனிதனாக இருக்கும் வரை யாரும் கண்டு கொள்ள மாட்டார்கள்.

அவன் தேர்தலில் போட்டியிட்டு முதலமைச்சராகி விட்டால் தனி மதிப்பும் மரியாதையும் வந்துவிடும். இந்த மதிப்பும் மரியாதையும் வருவதற்கு முதலமைச்சருக்கு ஆளுநர் பதவி பிரமாணம் செய்து வைக்க வேண்டும்.

பதவிப் பிரமாணம் செய்ததும் சாதாரண மனிதர் அமைச்சராகி விடுகிறார். அதுபோல சாதாரண கல், பதவிப்பிரமாணம் எனும் கும்பாபிஷேகம் செய்யப்பட்டதும் உலகை ஆளும் இறை சக்தியான உயர் அங்கீகாரத்தைப் பெற்று விடுகிறது.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## ஐ.டி.எச். பணிப்பாளருக்கு தடுப்பூசி செலுத்தப்பட்டது



(கொழும்பு)

முதல் மருத்துவ அதிகாரியாக ஐ.டி.எச்.பணிப்பாளர் மருத்துவர் ஆனந்த விஜேவிக்ரம, இந்திய கோவிஷீல்ட் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளார்.

இந்தியாவினால் வழங்கப்பட்ட அஸ்ட்ராஜெனெகா கோவிஷீல்ட் தடுப்பூசி, சுகாதார அதிகாரிகள், முப்படையினர் மற்றும் பொலிஸாருக்கு முதலில் செலுத்தப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பொலிஸ் உத்தியோகத்தர் சடலமாக மீட்பு

(கொழும்பு)

மொனராகாலை - அம்பகமுவ பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றி வந்த பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் வியாழக்கிழமை இடம்பெற்றுள்ளது. (நி-4)

## 38 பேருக்கு கொரோனா தொற்று மூடப்பட்டது ஆடைத்தொழிற்சாலை

(பொலநறுவை)

பொலநறுவை மாவட்டத்தில் உள்ள ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் கடமையாற்றும் ஊழியர்களில் 38 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

பொலநறுவை மாவட்டம், லங்காபுர பிரதேசத்தில் உள்ள குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஊழியர்களிடையே மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் ஊழியர்கள் 38 பேருக்கு கடந்த செவ்வாய்க்கிழமை தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. இதையடுத்து குறித்த ஆடைத் தொழிற்சாலை தற்காலிகமாக மூடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (நி-4)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 500 | 500 | 400 |
| உருளைக்கிழங்கு | 140 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 800 | 800 | 1000 |
| தக்காளி | 140 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 70 | 50 | 60 |
| கோவா | 100 | 100 | 100 |
| கரட் | 240 | 260 | 280 |
| பூசணி | 120 | 150 | 200 |
| புடோல் | 140 | 220 | 240 |
| வாழைக்காய் | 60 | 50 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 500 | 800 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 120 |
| பாகற்காய் | 250 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 140 | 240 | 240 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 120 |
| பயற்றங்காய் | 350 | 350 | 320 |
| லீக்ஸ் | 150 | 150 | 200 |
| பீற்றூட் | 160 | -- | 240 |
| கறிமிளகாய் | 280 | 350 | 400 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | 260 | 200 | 240 |
| கத்தரிதம்புள்ள | 280 | 400 | 400 |
| கீரை - 1 பிடி | 70 | 70 | 80 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 250 | 250 | 200 |
| வெங்காயப்பூ | 300 | 340 | 40 |
| முள்ளங்கி | 100 | 150 | 160 |
| பொன்னாங்காணி | 40 | 60 | 40 |
| வல்லாரை | 30 | 100 | 50 |
| ஈரப்பலா | -- | 120 | 80 |



# சிறுவர் அரங்கம்

## பூனைக்கு மணிகட்டிய எலி



ஒரு வீட்டில் நிறைய எலிகள் இருந்தன. அவை அனைத்தும் ஒன்று சேர்ந்து கூட்டம் போட்டன.

ஓர் எலி எழுந்து, 'இங்குள்ள பூனையின் கொடுமை தாங்க முடியவில்லை; நாள்தோறும் நான்கைந்து எலிகளைக் கொன்று தின்கின்றது. நம் இனம் நாளுக்கு நாள் அழிந்து கொண்டே வருகிறது. நாம் அதனிடமிருந்து தப்பிக்க ஏதேனும் வழி கண்டாக வேண்டும்' என்று உணர்ச்சியுடன் பேசியது.

கிழ எலிஒன்று எழுந்து, 'நீ சொல்வது உண்மைதான். நாம் எல்லோரும் பூனைக்கு அஞ்சி அஞ்சித்தான் வாழ்கிறோம். அதனிடமிருந்து தப்பிக்க வழி ஏதும் இருப்பதாகத் தெரியவில்லையே, என்ன செய்வது?' என்றது.

அங்கிருந்த சுண்டெலி ஒன்று எழுந்து, 'நாம் எதிர்பாராத நேரத்தில் பூனை நம் மீது பாய்ந்து பிடித்துக் கொள்கிறது. நம்மால் தப்பிக்க முடியவில்லை. பூனை வருவது நமக்கு முன்னரே தெரிந்தால் நாம் அதனிடமிருந்து தப்பிக்க முடியும்.

நாம் எப்படியாவது முயன்று பூனையின் கழுத்தில் ஒரு மணியைக் கட்டிவிட்டால் போதும். அது வரும் போதெல்லாம் மணி ஓசை நமக்குக் கேட்கும். நாம் வளைக்குள் பாதுகாப்பாகப் பதுங்கிக் கொள்ளலாம். பூனையால் நம்மைப் பிடிக்கவே முடியாது' என்றது.

'ஆ! அருமையான திட்டம். இனி அந்தப் பூனையால் நம்மைப் பிடித்துத் தின்ன முடியாது' என்று பல எலிகள் அந்தச் சுண்டெலியைப் பாராட்டின.

'திட்டம் நல்ல திட்டம்தான். அதை நிறைவேற்றுவதில் ஒரு சிக்கல் உள்ளதே' என்றது கிழ எலி ஒன்று.

'பூனையின் கழுத்தில் மணி கட்டப் போவது யார்? நீங்களா? அல்லது திட்டத்தைச் சொன்ன சுண்டெலியா? நம்மால் பூனையின் அருகே சென்று உயிருடன் திரும்ப முடியுமா? இயலாத செயலுக்கு ஏன் இப்படி ஆரவாரம் செய்கிறார்கள்?' என்றது அது.

அப்பொழுதுதான் மற்ற எலிகளுக்கும் 'பூனையின் கழுத்தில் மணி கட்டுவது இயலாத செயல்' என்பது புரிந்தது.

எல்லா எலிகளும் தலையைக் கவிழ்த்தன. ஆனால் இரு இளம் எலிகள் இரு வேறு யோசனைகள் கூறி பூனையின் கழுத்தில் மணியைக் கட்டின.

அவற்றைக் கேட்டு வியந்த மற்றைய எலிகள் இவ்விரு எலிகளின் புத்திக்கூர்மையை மெச்சின. அடுத்த நாள் பூனை வரும்போது மணியோசை கேட்டது. எலிகள் ஓடி ஒளிந்தன. பூனைக்கு ஏமாற்றம். அதற்குப் பிறகு, பூனையால் அந்த வீட்டில் ஓர் எலியைக்கூட பிடிக்க முடியவில்லை.

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## காதலும் கனவும்




...என்னைப் பிடித்திருக்கிறதா? ஏதோ வார்த்தைகள் வெளிப்படத் திணறி அவளது தொண்டைக்குழிக்குள் தொங்கிக் கொண்டிருப்பதை அவரால் உணர முடிந்தது.

தைரியமாகச் சொல். எனக்கு தைரியமானவர்களைத் தான் பிடிக்கும். எனக்கும் அதனால் தான்... அவளிடமிருந்து அலெசாண்டருக்கான முதல் வார்த்தைகள் பிரசவமானது.

அதனால்தான்... சிறு வயதிலேயே... தயக்கம் வீரர்களுக்குப் பிடிக்காது. அது உனக்குத் தெரியுமா? தாங்கள் சிறுவயதில் குதிரையை அடக்கிய வித்தையை என்னுடைய தாத்தா காட்சியாகவே விபரித்திருக்கிறார்.

ஓஹோ! அந்த நொடி முதலே நான் உங்களை... அப்படியென்றால் ஏன் சொல்ல வில்லை. பயமாக... நான் என்ன பயங்கரமானவனாகவா தெரிகின்றேன்.

உங்கள் படைவீரர்கள் பலரிடம் பேசியிருக்கின்றேன். ஒவ்வொருவரிடமும் உங்களைப் பற்றிக் கேட்டு நிறையவே தெரிந்து கொண்டேன்.

குறிப்பாக தங்களுக்கு எந்த மாதிரியான உடல் மொழியைப் பயன்படுத்தி போர் புரிந்தால் என்று புரிந்து கொண்டேன். அவைதான் என் நாட்டியத்துக்கான அபிநயங்கள்.

அலெக்சாண்டரின் புருவங்கள் ஆச்சரியத்தில் நிமிர்ந்தன. அறிமுக மொழிகள் காதல் மொழிகளாக நீண்டன. அவளிடமிருந்த இறுக்கம் நெருக்கமாக உருமாறியது. அலெக்சாண்டருக்கு ரொட்டி பரிமாறினாள் அவள். அதைத் தன் வாளால் வெட்டி அவளுக்கே ஊட்டிவிட்டார் அலெக்சாண்டர்.

மலைச்சர்தியினர் முன்னிலையில் அலெக்சாண்டருக்கும் ராக்சேனாவுக்கும் திருமணம் விமரிசையாக நடைபெற்றது.

திருமணம் நடந்துவிட்டது. பாரசீகத்தைக் கைப்பற்றியாகி விட்டது. கிரேக்கமும் கைக்கு வந்துவிட்டது. எகிப்தும் வசமாகிவிட்டது.

ஆசியாவும் அடங்கிவிட்டது. அடுத்தது இந்தியா. தந்தை பிலிப்பின் கனவு. தனது கனவு. (தொடரும்)

சுதந்திரம் ! அது இல்லாதபோது நிலம், நீர், சிறப்பு, செல்வாக்கு ஆகிய எது இருந்தும் என்ன பயன்? சுதந்திரம்தான் மனிதனின் முதல் தேவை. ~ *எமர்சன்*

வலம்புரி

TP: 021 222 3378

website : www.valampurii.lk

## ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும்படை

அதர்மம் நின்று நிலைத்ததான வரலாறுகள் ஏதும் கிடையா.

அதர்மம் வெல்வது போன்ற – ஆட்சி செய்வது போன்ற தோற்றப்பாட்டைக் காட்டிக் கொண்டாலும் அஃது உரிய நேரத்தில் அழிந்து தர்மமே வெல்லும்.

இதுவே உண்மையும் இயற்கையின் நியதியுமாகும்.

இதில் இருந்து எவரும் தப்ப முடியாது. இதனையே தெய்வம் நின்றறுக்கும் என்று நம் தமிழ் மொழி கூறுகிறது.

இது ஒருபுறமிருக்க, தமிழ் மக்களுக்கு எதிராக இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் நடத்திய கொடும்போரில் தமிழ் மக்கள் கொன்றொழிக்கப்பட்டனர்.

குடும்பம் குடும்பமாக இறந்துபோன அந்தச் சோகம் தணிந்துபோக இன்னும் பல நூறு ஆண்டுகள் ஆகும்.

தவிர, கொன்றொழிக்கப்பட்ட இனத்தின் அவலத்தைத் தீர்த்து வைக்க வேண்டும் என்ற நினைப்பு ஏதுமில்லாமல், தமிழ் மக்களை மீண்டும் மீண்டும் சீண்டுகின்ற பேரினவாதக் கொடுமையை என் சொல்வது.

ஆம், சரத் வீரசேகர போன்றவர்கள் இனவாதத்தை கக்கி தமிழ் மக்களின் உயிரைக் காவு கொள்வதற்கான காரியங்களைத் தொடர்ந்து செய்கின்றனர்.

இவர்கள் நினைப்பதெல்லாம் தமது இனவாதம் சிங்கள மக்களுக்கும் பௌத்த மதத்துக்கும் நன்மை தருமென்று. ஆனால் யதார்த்தம் அதுவன்று.

உண்மையில் சரத் வீரசேகர போன்றவர்கள் சிங்கள மக்களுக்கு அவப்பெயரை ஏற்படுத்துகின்றனர்.

தமிழ் மக்களை இவர்கள் என்ன பாடுபடுத்தியிருப்பார்கள் என்பதை உலகுக்கு நிரூபித்து நிற்கின்றனர்.

இருந்தும் சரத் வீரசேகர போன்றவர்கள் கக்குகின்ற இனவாதத் தீயை தடுப்பதற்கும் தவிர்ப்பதற்கும் ஆளுந்தரப்பு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இனவாதம் பேசினால், நாட்டின் இறைமைக்குப் பங்கம் செய்தால், பிரிவினைக்கு வித்திட்டால் அது தேசத்துரோகம் என்று கூறுகின்ற சிங்கள ஆட்சியாளர்கள் மேற்குறித்த காரியத்தை தமிழர்கள் மட்டுமே செய்வார்கள் என்றும் எனவே அவர்களைத் தண்டிக்க வேண்டும் என்றும் திட்டம் தீட்டுகின்றனர்.

ஆனால் உண்மை அதுவன்று. இலங்கையில் இனவாதத்தை தூண்டுபவர்கள், நாட்டின் இறைமைக்குப் பங்கம் செய்பவர்கள். பிரிவினைக்கு மூலகாரணமாக இருப்பவர்கள் சிங்களப் பேரினவாதிகள் என்பதே மெய்மையானது.

எனினும் அத்தகையவர்கள் மீது எந்தச் சட்டநடவடிக்கையும் இல்லை எனும்போது தான், இலங்கை ஆட்சியாளர்களின் உச்சமான கபடத்தனம் தெரிய வருகிறது.

எதுஎவ்வாறாயினும் யுத்தத்தின் கொடுமையால், தங்கள் உறவுகளை இழந்து சதா அழுகையுடன் அலைகின்ற எம் தமிழ் மக்களின் கண்ணீர் நிச்சயம் அதர்மத்தை அழித்தொழிக்கும்.

ஆம், அல்லல்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றோ செல்வத்தைத் தேய்க்கும் படை என்ற வள்ளுவனின் உபதேசம் நிச்சயம் நிஜமாகும். இது சத்தியம்.

## வட்டு.பிரதேச வைத்தியசாலைக்கு அடிப்படை வசதிகளை பெற்றுத்தருமாறு மக்கள் கோரிக்கை

(அராலி)

வட்டுக்கோட்டை பிரதேச வைத்தியசாலையினால் மேற்கொள்ளப்படும் சேவைகளை விரிவுபடுத்துமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ் வைத்தியசாலை தொடர்பாக மக்கள் கருத்து தெரிவிக்கையில்,

இந்த வைத்தியசாலையில் பதினைந்திற்கும் மேற்பட்ட கிராமங்களைச் சேர்ந்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மருத்துவ சேவையினைப் பெற்று வருகின்றோம்.

இருப்பினும் எம்மால் முழுமையான மருத்துவ சேவையைப் பெற முடியாதுள்ளது.

ஆரம்பத்தில் இருந்த சேவைகளைக் கூட தற்போது பெறமுடியாதுள்ளது.

குறிப்பாக இரத்தப் பரிசோதனை, நோயாளர்கள் விடுதியில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் வசதி, அம்புலன்ஸ் சேவை போன்ற பல வசதிகள் இருந்து வந்துள்ள நிலையில் தற்போது அவ் வசதிகள் இல்லாமல் உள்ளது.

வைத்தியர் ஒருவர் காலை 8 மணிமுதல் பிற்பகல் 4 மணிவரையே சேவையில் இருப்பார். இந்த நிலையில் இவ்வளவு கிராமங்களைச் சேர்ந்த மக்களும் எவ்வாறு மருத்துவ சேவையினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அன்றாடம் உழைத்து குடும்பத்தினை நடத்தி வரும் நாங்கள் தனியார் வைத்திய சேவையைப் பெறமுடியாது.

எனவே பிரதேச வைத்தியசாலை ஒன்றில் இருக்க வேண்டிய அடிப்படை மருத்துவ வசதிகளையேனும் வழங்குவதோடு 24 மணிநேரமும் மருத்துவர் கடமையில் இருப்பதற்கான ஏற்பாட்டினையும் மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கின்றோம் என மக்கள் தெரிவித்தனர். (5-4-104)

## கடல் அரிப்பை தடுக்க நடவடிக்கை ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் தீர்மானம்

(சாவகச்சேரி)

வலிகாமம் வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் கரையோர மக்களுக்கு பெரும் சவாலாக விளங்கும் கடல் அரிப்பு அனர்த்தம் தொடர்பாக கரையோர பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற தெல்லிப்பழை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின்போதே கடல் அரிப்பை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி கிராமம் முழுவதும் கடல் அரிப்பு இடம்பெற்று வருவதால் மக்களின் காணிகள் கடலுக்கு இரையாகிப் போவதாகவும் இதனால் கரையோர மக்கள் வீடுகளை அமைக்கும்போது அவற்றுக்கு பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை காணப்படுவதாகவும் பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டிய போதே இது தொடர்பாக அனர்த்த முகாமைத்துவம் மற்றும் கரையோர பாதுகாப்பு அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு செல்வதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி வடக்கு, தையிட்டி வட்க்கு மற்றும் பலாலி வடக்கு பகுதிகளில் கடல் அரிப்பைத் தடுக்கும் அணைகள் அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு நிலவுவதாக பிரதேச செயலகத்தினர் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கருங்கல்லால் ஆன தடுப்பணைகள் அமைத்து நிலங்கள் மற்றும் வீடுகளைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4-30)

## உதவிப் பொலிஸ் அத்தியட்சகருக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(கொழும்பு)

இலங்கைப் பொலிஸின் உதவிச்சேவை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்/ பெண் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்/ மின் பொறியியலாளர்/ இலத்திரனியல் பொறியியலாளர் பதவிகளுக்காக இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப்படிவங்களை பணிப்பாளர்/ ஆட்சேர்ப்புப் பயிலுநர்களின் ஆட்சேர்ப்புப் பிரிவு, இல. 375, முதலாம் மாடி, ஸ்ரீசம்புத்தத்வ ஜெயந்தி மாவத்தை, கொழும்பு-06 எனும் முகவரிக்கு 2021.02.15 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு நேற்று 29.01.2021 வெள்ளிக்கிழமை வெளிவந்த வர்த்தமானி அறிவித்தலைப் பார்வையிடவும். (நி-4)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** கலட்டி, நாச்சிமார்கோவில் கே.கே.எஸ்.வீதியிலிருந்து சிவன் கோயில் கே.கே.எஸ். வீதிவரை, அரசடி வீதி, பிறவுண் வீதி, கஸ்தூரியார் வீதி, சிவன் பண்ணை வீதி, மானிப்பாய் வீதி, இராமநாதன் வீதி, கரிகணன் அச்சகம், எவகிறீன் அச்சகம், அண்ணாமலையான் ஸ்ரீ ராகவேந்திரா என்டர்பிறைசஸ் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### மனம் தளராதே! மதி மயங்காதே!

❖ நமது கைகளில் ஏற்கனவே உள்ள மாபெரும் ஆற்றலை அடக்கி ஆளகற்றுக்கொள்ள வேண்டும். அதை ஆன்மிக சக்தியாக மாற்ற வேண்டும்.

❖ நம்பிக்கையை இழந்துவிடாதே. பாதை, கத்தி முனையில் நடப்பதைப் போல மிகவும் கடினமானது தான். எனினும் விழித்துக்கொள், மனம் தளராதே. நீ அடைய வேண்டிய உனது லட்சியமாகிய குறிக்கோளை கண்டுபிடி.

❖ மக்கள் என்ன வேண்டுமானாலும் சொல்லட்டும். நீ உனது சொந்த உறுதியான முடிவில் பிடிப்புடன் இரு. பிறகு நிச்சயமாக மற்றவை நடந்தேறி உலகம் உனது காலடியில் பணிந்து கிடக்கும்.

❖ பிறரை முதலில் நம்புவதைவிட்டு உன்னை நீ முதலில் நம்பு. அனைத்து ஆற்றல்களும் உனக்குள்ளேயே இருப்பதால், அதை உணர்ந்து அந்த ஆற்றலை வெளிப்படுத்து. "நான் எதையும் சாதிக்கவல்லவன்" என்று சொல். நீ உறுதியுடன் எதையும் பொருட்படுத்தாமல் இருந்தால் பாம்பின் விஷம் கூட சக்தியற்றதாகிவிடும்.

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–228

# உலக பழங்கள் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கான ஆண்டு

## International Year of Fruits and Vegetables



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

உலக உணவு மற்றும் விவசாயத்திற்கான தாபனம் இவ்வருடத்தை உலக பழங்கள் மற்றும் மரக்கறிப் பயிர்களுக்கான ஆண்டாக பிரகடனப்படுத்தியிருக்கின்றது. பழவகைகள் மற்றும் மரக்கறிப் பயிர்கள் எமது உணவில் முக்கிய பங்கினை வகிக்கின்றன. எமது உடலுக்குத்தேவையான அவசியமான ஊட்டச்சத்தினை தருகின்ற உணவுப் பயிர்களாக இவை விளங்குவதுடன் எமக்கு இலகுவான வகையில் மலிவாக கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.

குறிப்பாக மரக்கறிகள் பச்சையாக உணவில் சேர்க்கும் போது எமக்கு தேவையான அதிகளவிலான எதிர்ப்பு சக்தியும் அவசியமான கலோரியும் கிடைக்கின்றது. வாழ்க்கையில் நலிந்து போயுள்ள மக்களுக்கான உணவாக பழங்களும் மரக்கறிப் பயிர்களும் இருக்கின்றன என்றால் மிகையாகாது.

ஆச்சரியமென்னவென்றால், இவ்விரண்டும் இலகுவாக வீட்டுத்தோட்டத்தில் உற்பத்தி செய்யக்கூடியனவாக இருப்பதுடன் அவற்றை தினமும் உட்கொள்ள வழிகளும் இருக்கின்றன.

அவசியமான பழவகைகளை இலகுவாக வீட்டுத்தோட்டத்திலேயே பயிரிடுவதற்கு வாய்ப்புக்கள் இருக்கின்றபோது இவற்றை திட்டமிட்டு தினந்தினம் கிடைக்கக்கூடியதாக நாம் பயிரிட்டுக் கொள்ளலாம்.

பழவகைகளுடன் மரக்கறிப்பயிர்களும் மிகவும் அவசியமானதாகும். எமது பிரதேசத்தில் கிடைக்கக்கூடிய மரக்கறி பயிர்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்தால் அவற்றிலிருந்து எமக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்தும் கிடைப்பதுடன் எமது உடலை நோய்கள் இலகுவில் அணுகாது எதிர்ப்பு சக்தியையும் உருவாக்கிக் கொள்ள முடியும்.

இவற்றில் எமது உணவில் தேவையான மூலிகை வளங்களைக் கொண்ட மரக்கறிப் பயிர்களை நடவு செய்வது மிகவும் சிறந்ததாகும்.

எமது நாட்டில் போசாக்கின்மை பலதரப்பு மக்களிடையே காணப்படுவது சரியான சமமான ஊட்டச்சத்து நிறைந்த உணவை நாம் உட்கொள்ளாததனாலேயே என புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. அநேகமானவர்கள் சரியான நேரத்தில் உணவருந்தாததனால் அவர்களுக்கு குடற்புண் ஏற்பட்டு அவஸ்தைக்குள்ளாவதனையும் காண முடிகின்றது. கற்றவர்களின் மத்தியில் இவ்வாறான குடற்புண் ஏற்பட்டவர்கள் அதிகமாக இப்போது இருப்பதனை காண முடிகின்றது.

சரியான நேரத்தில் உண்ணாமை இதற்கு ஒரு காரணமாக முன்வைக்கப்பட்டாலும் வேலையில் ஆழ்ந்து உணவை வெறுத்து பணிபுரிபவர்களாகவே நம்மில் பலர் காணப்படுகின்றனர். அதனையும் தாண்டி விரைந்துணவுக்குள் எம்மை நாமே திணித்துக் கொண்டு அதிலிருந்து விடுபட முடியாமல் அல்லற்படுவதனை அவதானிக்க முடிகின்றது.

இயற்கை நமக்குத் தந்த

ப்பதில் நாம் கவனிக்க வேண்டிய பல விடயங்கள் உள்ளார்ந்து இருக்கின்றன. எமக்கு கிடைத்த முக்கனிகள் மிகவும் முக்கியமானவை. மா, பலா, வாழை என இவை மூன்றும் இயற்கையாக எமக்குக் கிடைத்த வரப்பிரசாதங்கள். அவற்றை நாம் இயன்றவரை உணவாக உட்கொள்ள வழிசெய்திடல் வேண்டும்.

பழங்களை பாதுகாத்து உட்கொள்வத்னை விட உடனடியாக உட்கொள்வதே சிறந்தது. அந்த வகையில் அவற்றை நாமே வளர்த்து அறுவடை செய்து உணவாக்கிக் கொள்ளலாம். சமமான உணவு என்பதில் பழவகைகளும் மரக்கறிப் பயிர்களின் பங்களிப்பு அதிகமானதாகவே இருக்கின்றது.

கொள்ளுங்கள்.

இயற்கை உணவை உண்பதற்கான வாய்ப்புக்களை அதிகரித்துக் கொள்ளுங்கள். நோய் நொடி எதுவும் எம்மை அணுகாது பார்த்துக் கொள்ளுங்கள்.

பழங்களும் மரக்கறிப் பயிர்களும் விரைந்து பழுதடையக் கூடியன. அதனால் உற்பத்தியாகும் உணவுப்பொருட்களான இவை விரைந்து உணவாக்க உட்கொள்ளப்படல் வேண்டும். தவறின் அவற்றை சேமிப்பதற்கான வாய்ப்புக்களை பயன்படுத்தல் வேண்டும்.


பழங்களை சேமிப்பதற்கு மதிப்பேற்ற பொறிமுறை அதிகளவில் உதவும். ஆனால் மரக்கறிப் பயிர்களை அதிக நாட்களுக்கு சேமிக்க முடியாது. ஆதலால் அவற்றை விரைந்து

றது.

உலகளவில் 14 சதவீதமான குடல் புற்றுநோய் சரியான அளவில் பழங்களையும் மரக்கறிப் பயிர்களையும் உட்கொள்ளாமை காரணமாக் காட்டப்பட்டிருக்கின்றது.

இவற்றையெல்லாம் வைத்துப் பார்க்கும் போது நாம் எமது உணவில் அதிகமாக பழங்களையும் மரக்கறிப் பயிர்களை

**இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 311**




எங்களுர் பழங்களையும் மரக்கறிப் பயிர்களையும் நாமே பயிரிட்டு அதனை அறுவடை செய்து நஞ்சற்ற உணவாக உட்கொள்ள என்று நாம் பழக்கப்படுத்திக் கொள்ளுகின்றோமோ அன்றிலிருந்து தான் இங்கே மேற்கூறிய உபாதைகளுக்கான தீர்வாக அவை அமையும்.

எமது உடலை நாம் அறிந்திராவிட்டால் பின்னர் யார்தான் அதனைக் கவனிக்கப் போகின்றார்.

எமது உடலுக்குத் தேவையானதை நாம் உண்டு எமது தேகாரோக்கியத்தை கவனிக்க வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

இவ்வருடத்தில் பழங்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடு

மரக்கறிப் பயிர்களை உணவாகக் கொண்டவர்களுக்கு கொரோனா நோயின் தாக்கமும் குறைவாக இருந்ததாக தரவுகளை அடிப்படையாக வைத்து ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

இருந்தாலும் எம்மை நாம் தயார்படுத்திக் கொண்டு இவ்வாறான நோய்களுக்கு எதிரான எதிர்ப்புத்தன்மையை உருவாக்கிவிட்டால் எந்த வீரியமான நுண்ணங்கியாக இருந்தாலும் அதற்கு எதிரான எதிர்ப்புத் தன்மையை விரைந்து உருவாக்கி விடலாம்.

எமது வீட்டுத் தோட்டத்தை எமக்கானதாக எமது அன்றாட உணவைப் பெற்றுக் கொள்ளத் தக்கதாக மாற்றியமைத்துக்

உணவாக்க முயற்சி செய்தல் அவசியமாகின்றது.

உலக சுகாதார தாபனத்தின் அறிக்கையின் படி ஒரு நாளைக்கு ஆகக்குறைந்தது 400 கிராம் ஆவது மரக்கறிப்பயிர்கள் மற்றும் பழப்பயிர்களை உட்கொள்வது சிறந்தது. எமது உடலுக்கு தேவையான நார்த்தன்மை, ஊட்டச்சத்துக்கள் என அனைத்திற்கும் நாம் இவற்றையே நாடி நிற்க வேண்டியிருக்கின்றது.

உலக சுகாதார தாபனத்தின் 2019 அறிக்கையின் படி 2017 ஆம் ஆண்டு 309 மில்லியன் மக்கள் இறந்தமைக்கு தேவையான பழங்கள் மற்றும் மரக்கறிப் பயிர்களை உட்கொள்ளாததே காரணமாக கூறப்படுகின்

யும் சேர்த்துக் கொள்வது அவசியமாகின்றது.

அதனாலேயே இவ்வருடத்தை பழங்களுக்காகவும் மரக்கறிப் பயிர்களுக்குமாக பிரகடனப்படுத்தியிருக்கின்றார்கள்.

இவ்விடயத்தில் நாம் அதிக பழமரங்களையும் மரக்கறிப் பயிர்களையும் நடவு செய்து ஊட்டச்சத்து குறைபாட்டினை தீர்ப்பதற்கு எம்மாலான அனைத்து உதவிகளையும் செய்திடுவோம்.

வளமான எதிர்காலத்தை சந்ததியை உருவாக்குவதற்கு சமமான ஊட்டச்சத்தான உணவு அவசியம். அதனை அனைவருக்கும் கிடைக்கச் செய்வோமாக.

## பயங்கரவாத...

பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த 17 உத்தியோகத்தர்களிற்கு கொரோனாத் தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

வவுனியாவில் அமைந்துள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவினரால் தடுத்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்ட பலருக்கு கொரோனா தொற்று இருப்பது அண்மையில் உறுதி செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த பிரிவில் பணிபுரியும் உத்தியோகத்தர்களிற்கும் பி.சி.ஆர் பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அதன் முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன. அதன் அடிப்படையில் பயங்கரவாத தடுப்பு பிரிவு மற்றும் ஏனைய பொலிஸ் பிரிவுகளை சேர்ந்த 17 பேருக்கு கொரோனா தொற்று நேற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,299)

## மின்சாரத்தில்...

கிராம அலுவலகர் பிரிவில் பிரதான வீதிக்கு சற்றுத் தொலைவில் விலங்குகளை வேட்டையாடுவதற்கு சட்டவிரோதமாக இணைக்கப்பட்ட மின்சாரம் தாக்கி உயிரிழந்த நிலையில் இரண்டு சடலங்களை நேற்றுக் வெள்ளிக்கிழமை காலை மன்னார் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் அடம்பன் பள்ளிவாசல்பிட்டி பகுதியைச் சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான மூக்கையா மகேந்திரன் (வயது-45) மற்றும் வேட்டையார் முறிப்பு பகுதியை சேர்ந்த 3 பிள்ளைகளின் தந்தையான அந்தோனிப்பிள்ளை தேவசங்கர் (வயது-37) என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,285)

## இராணுவத்...

ஜெனெகா தடுப்பூசியின் டோஸ்கள் படையினருக்கு ஏற்றும் பணி நேற்று காலை நாரஹென்பிட்டி இராணுவ மருத்துவமனையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-3)

*(மற்றொரு செய்தி உள்ளே)*

## வடக்கு, கிழக்கு...

யுள்ளார்.

18 வயதுக்கு மேற்பட்டோர் இராணுவப் பயிற்சி பெற வேண்டும் என்ற பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியர் அட்மிரல் சரத் வீரசேகரவின் கருத்தை தாம் வரவேற்பதாகவும் சி.வி.விக்னேஸ்வரன் கூறியுள்ளார்.

ஊடகவியலாளர் கேள்விக்கு பதிலளிக்கும் நோக்கில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

16 வயதிலிருந்து சகல மாணவர்களும் இராணுவப் பயிற்சி பெற வேண்டும் எனவும், அவர்களுக்கு தமிழ் பேசும் அலுவலர்களே பயிற்சி கொடுக்க வேண்டும் எனவும் சி.வி.விக்னேஸ்வரன் வலியுறுத்தியுள்ளார்.

போதிய தமிழ் பேசும் அலுவலர்கள் இராணுவத்தில் இல்லையாயின், முன்னாள் தமிழ் போராளிகளுக்கு இந்த பணியைச் செய்யச் சொல்லி ஊதியம் வழங்கலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எனினும், எந்த விதத்திலும் சிங்கள மொழியில் மாணவ மாணவியருக்கு பயிற்சி அளிக்கப்படக் கூடாது என்பதை அவர் வலியுறுத்தியுள்ளார்.

அவ்வாறு பயிற்சியாளர்களுக்கு தட்டுப்பாடு காணப்படுமாயின், தென்னிந்தியாவில் இருந்து தமிழ் பயிற்சியாளர்களை வரவழைக்கலாம் என்ற ஆலோசனையையும் அவர் வழங்கியுள்ளார். (ம-3)

## உ/த மாண...

பாடசாலைக்கு சமுகமளிக்காத நிலையில் வீட்டில் தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உயர்தரம் வர்த்தக பிரிவில் கல்வி கற்கும் மயில்வாகனபுரம் கிராமத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவனே தற்கொலை செய்து கொண்டுள்ளான். (ம-3)

## வடக்கின் 5...

சோதகர்கள் மற்றும் ஊழியர்களுக்கு கோவிட்-19 தடுப்பூசி மருந்து ஏற்றும் பணி இன்று தொடக்கம் மூன்று நாட்களுக்கு முன்னெடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (ம-3)

## குடும்பப் பெண்...

குழி புதிய வீட்டுத் திட்டத்தைச் சேர்ந்த நிசாந்தன் நிரோஜினி (வயது-30) என்ற 4 பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த குடும்பப் பெண் கடந்த 25ஆம் திகதி தனக்குத்தானே தீ மூட்டிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தார்.

எனினும் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ். போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## ஐ.நாவின் அறிக்...

ளிக்க அர்த்தமுள்ள நடவடிக்கைகளை எடுப்பதைப் பொறுத்தே அமையும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் அமைப்பின் அறிக்கை குறித்து அமெரிக்க வெளியுறவுத் துறையின் செய்தித் தொடர்பாளர் நெட் பிரைஸ் தனது டுவிட்டர் பதிவிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

அத்துடன் அந்த டுவிட்டர் பதிவில், இலங்கையில் மனித உரிமைகள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையை நாங்கள் கவனமாக பரிசீலித்து வருவதாகவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார். (ம-3)

## வீட்டுக் கூரை...

நொச்சி பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவினாரால் மீட்கப்பட்டுள்ளது.

தலைமை பொலிஸ் நிலைய மது ஒழிப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலிற்கு அமைவாக கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பின் போது இவை மீட்கப்பட்டுள்ளன.

சம்பவம் தொடர்பில் சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டதுடன் கிளிநொச்சி நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ம-3,100)

## விளையாட்டு...

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் விளையாட்டு பயிற்றுவிப்பாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் யாழ்ப்பாணம், அரியாலைப் பகுதியிலுள்ள பாடசாலை ஒன்றில் விளையாட்டுப் பயிற்றுவிப்பாளராக கடமையாற்றிய நல்லூர்ப் பகுதியைச் சேர்ந்த சிறிதரன் மயூரதன் (வயது-25) என்பவரே உயிரிழந்துள்ளார்.

தன்னுடைய சகோதரனுடன் மோட்டார் சைக்கிளில் உரும்பிராய் மானிப்பாய் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த போது பிக்கப் வாகனத்தின் முன் பாய்ந்து குறித்த விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர் தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

இவரது மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3)

## கோவி...

என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெள்ளிக்கிழமை அறிவித்துள்ளது.

இதன் மூலம் நாட்டில் கோவிட் - 19 நோயால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 305ஆக உயர்வடைந்துள்ளது.

அத்துடன், நாட்டில் நேற்று 859 பேர் கோவிட் - 19 நோய்த் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

மேலும் மொத்த தொற்றாளர்கள் எண்ணிக்கை 62 ஆயிரத்து 445 ஆக உயர்ந்துள்ளது. (ம-3)

## 7 பேருக்கு...

நேற்று வெள்ளிக்கிழமை 359 பேருக்கான கொரோனாத் தொற்றுப் பரிசோதனைகள் செய்யப்பட்டுள்ளதாகவும்,

அவர்களில் வடமாகாணத்தில் ஏழு பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்தாகவும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் த. சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

அந்தவகையில் மன்னாரில் ஐந்து பேருக்கும் முல்லைத்தீவில் ஒருவருக்கும் வவுனியாவில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். (ம-3,18)

## ஐ.நா உறுப்பு...

எதிர்வரும் பெப்ரவரி மாதம் ஆரம்பமாகவுள்ள ஜெனிவா கூட்டத் தொடரின் போது ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை, அதன் ஆணையாளர் மிச்சேல் பச்லெட்டினால் முன்வைக்கப்பட்டுள்ள பரிந்துரைகளுக்கு அமைவாக செயலாற்றுவது அவசியமாகும்.

இலங்கையில் தற்போது மோசமடைந்துவரும் மனித உரிமைகள் நிலைவரம் தொடர்பில் கண்காணிப்பதற்கும் கடந்த காலத்தில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கான பொறுப்புக்கூறலை உறுதி செய்வதற்கும் ஏற்றவகையிலான புதியதொரு தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவை நிறைவேற்ற வேண்டும் என்றுள்ளது. (ம-3)

தன நிதானய
திகதி - 2021.01.29
சீட்டிழுப்பு இலக்கம் - 419
A 19 24 49 60

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 29.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2677
R 03 16 17 74

மஹஜன சம்பத
திகதி 2021/01/29
சீட்டிழுப்பு இலக்கம் 4382
D 3 1 0 9 0 4

சுபிரி வாசனா
2021/01/29
1570
01 04 24 47 55

மெகா பவர்
திகதி 29/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0749
K 08 05 46 56 57

அத கோடிபதி
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1178
வர்ணம்: ஊதா
சீட்டிழுப்பு திகதி: 29.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 103,328,935
02 05 45 55 W

சனிதா
கிழமை: வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3508
வர்ணம்: செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 29.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 30,164,086
15 18 36 63 R

ராசி
சுப்பர் ஜக்பொட் 3,707,229/=
திகதி: 29.01.2021
வெற்றி வாரம்: 3059
வர்ணம்: கடும் நீலம்
வெற்றி இலக்கங்கள் 16 18 45 52
கடகம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,949,880

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1352
நிறம் இளஞ் சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 29/01/2021
தினம் வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் 65,868,609/=
N 24 35 42 71

வசனா சப்பிய
683
29.01.2021
வெள்ளிக்கிழமை
F 09 40 53 79
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 80,319,335
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

## வேலையாள் தேவை

கிறைண்டிங் மில்லிற்கு வேலை தெரிந்தவர் அல்லது பழக விருப்பமுள்ளவர்கள் உடன் தேவை.

**சம்பளம் : 1500/= இற்கு மேல்**

(C-1300)

☎ - 077 936 1356

## உடனடி வேலை வாய்ப்பு

My Pizza

K.K.S வீதி, கோண்டாவிலில் அமைந்துள்ள **My Pizza** நிறுவனத்திற்கு பின்வரும் வேலைக்கு ஆட்கள் தேவை.

01. Pizza Making Helper

02. Delivery boy (மோட்டார் வாகன சாரதி அனுமதிப் பத்திரம் அவசியம்.)

வேலை நேரம் : மதியம் 12 மணி – இரவு 10 மணி வரை

(5463)

தொடர்புகளுக்கு : 074 106 6559

## FLC FRENCH LANGUAGE CENTRE

Embassyஆல் அங்கீகரிக்கப்பட்ட

பிரெஞ்ச் Classes

V. Jegan (Trained in France)

(C-1288)

19 பலாலி வீதி, ஆரியகுளம். 0779 789 456 / 021 221 7781

23/2, சோமசுந்தரம் அவெனியு, சுண்டிக்குளி. 0779789456 கச்சேரி Fuel Station அண்மையில்

திருமணமாகி U.K. செல்வோர்க்கான IELTS Life Skills A1,B1, Spoken English மற்றும் IELTS வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், கோண்டாவில் கிழக்கு, பழனி ஆண்டவர் கோவில் அருகாமையில் 4 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**2 பரப்பாகப் பிரித்துக் கொடுக்கப்படும்.**

(தரகர் தேவையில்லை.) (5460)

குரு - 077 805 1655, 077 596 3845

## PHYSICS

T.K. KAJAN B.Sc

077 653 1177 (5459)

## விற்பனைக்கு உண்டு

(BFA) சிவப்பு Pleasure Moter Bike விற்பனைக்கு உண்டு. (5452)

077 203 0309

## ஊர் கோழிக் குஞ்சுகள்

விற்பனைக்கு

- 1 நாள் ஊர் குஞ்சுகள் : Rs. 75/=
- 3 மாத குஞ்சுகள் : Rs. 480/=
- 1 நாள் காடைக் குஞ்சுகள் : Rs. 25/=
- ஊர் சேவல் : 1Kg 700/=

(5454)

JERI FARM, திருநெல்வேலி

077 354 9140, 077 274 1206

## காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் தும்பளை வீதிக்கு அருகில் உப்புமாக 2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (C-1248)

077 436 6704, 077 179 1963

## கட்டடம் வாடகைக்கு உண்டு

யாழ்ப்பாணம், ஆஸ்பத்திரி வீதி, சத்திரச்சந்தி அருகாமையில் 2ஆம் தளத்தில் 3 கடைகளும் 3 ஆம் தளத்தில் 3 கடைகளும் தனியார் கல்வி நிலையம், நிறுவனங்கள், களஞ்சிய சாலையாகவும் பயன்படுத்தவும் உகந்தது.

(5416)

தொடர்பு: குரு

076 221 2037

வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603 021 567 1532


## ‘மல்லிகை’ இதழாசிரியர் டொமினிக் ஜீவா காலமானார்



(கொழும்பு)

ஈழத்து இலக்கியத்துறையில் மிகப்பெரும் ஆளுமையாக வலம் வந்த மல்லிகை இதழ் ஆசிரியர் டொமினிக் ஜீவா 94 வயதில் நேற்று முன்தினம் காலமானார்.

மல்லிகை சஞ்சிகையை ஆரம்பித்து 48 வருடங்கள் 401 இதழ்களை வெளியிட்டு பெருமை சேர்த்தார்.

இலங்கையில் சாகித்திய மண்டலத்தின் சிறுகதைகளுக்கான சாகித் திய மண்டலப் பரிசினை முதன் முதலாகப் பெற்ற பெருமைக்குரியவர்.(5-4)


## AMC ACADAMY

23, BMC LANE, CLOCK TOWER ROAD, JAFFNA.

A/L Accounting 2021, 22

Tamil and English Medium

AAT Accounting Stage I,II,III

ஆரம்பம் : 31.01.2021 ஞாயிறு 10.00 a.m

By : A. Kalaichelvan (5462)

021 315 0000

077 694 4543

## திருமண சேவை

திருமணக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. வயது வந்தவர்கள், அரச உத்தியோகத்தர்களின் திருமண குறிப்புக்களும் உண்டு. (5425)

077 512 2931


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

பிரான்சிஸ் வின்சன் டீ போல்

மலர்வு 03.04.1938

உதிர்வு 01.01.2021

கடந்த 01.01.2021 (வெள்ளிக்கிழமை) அன்று இறைபதம் அடைந்த அமரர் பிரான்சிஸ் வின்சன் டீ போல் அவர்களின் இறப்பு செய்தியை அறிந்து நேரில் வந்து எமக்கு ஆறுதல் கூறி அவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக செபித்த யாழ். மறை மாவட்ட ஆயர் அதி வணக்கத்துக்குரிய மேதகு ஜஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்களுக்கும் மற்றும் குரு முதல்வர், அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் ஏனைய சமய தலைவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் ஊழியர்கள் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் தொலைபேசி வாயிலாகவும், சமூக வலைத்தளங்கள் ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறி செபித்த அனைவருக்கும் மலர் வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் துண்டுப் பிரசுரங்கள் வழங்கியவர்களுக்கும் பதாதைகள் அமைத்தவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் 31ஆம் நாள் நினைவஞ்சலி நாளை (31.01.2021) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அவரது ஆன்ம இளைப்பாறுதல் வேண்டி நடைபெறும் செபவழிபாட்டிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ரோஸ் கொட், கடற்கரை வீதி, பருத்தித்துறை. 021 226 3129 குடும்பத்தினர்

(C-1301)


## Architectural CAD Centre [Jaffna-Vavuniya-Colombo]

[Personal-Group-Visiting Classes]

2D-Drawing 3D-Modeling

# Auto CAD

Lecturer By Mr K.N Mugunthan(DIA)

University of Peratheniya.

University of Moratuwa.

Open University of Sri Lanka.

University of Colombo.

Link: 077-5116320 071-8617972 [Civil & Mechanical]

## வேலை வாய்ப்பு

முதன்மை நிதி ஆலோசகர்

- வேலை அனுபவம் 2 வருடங்கள்
- வயது 25 - 40

(5442)

எத்துறையிலிருந்தும் மேற்குறிப்பிட்ட பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக தகவல்களுக்கு

021 771 0251

077 733 9334

## விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS

UK-1000/=Kg

பிரான்ஸ்/ஜேர்மனி/டென்மார்க் நெதர்லாந்து/இத்தாலி/சுவிஸ் 1150/=Kg

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-1167)

0768226240 DHL

## அன்னை Express

விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

லண்டன் 1000/= 070 3305500 075 3305500

(C-1174)

சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு

லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை

15,000 /= பொதி வரை காப்புறுதி இலவசம்

உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

## BRITISH COLLEGE OF ENGLISH

OUR TARGET IS BAND : 09

# IELTS

ACADEMIC

GENERAL

LIFE SKILLS - A1/ B1

(C-1253)

✱ வகுப்புக்கள் BRITISH COUNCIL லில் பயிற்சி பெற்ற பல்கலைக்கழக விரிவுரையாளரினால் நடாத்தப்படுகின்றன.

✱ நாங்கள் IELTS - Registration Centre for British Council

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.

BRITISH COLLEGE OF ENGLISH

Palay Road, Urumpirai. (உரும்பிராய் பெற்றோல் செற்றிற்கு முன்னால்)

Tel: 021 222 0384, 077 880 3887


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 30.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.